# வணிகவியல்

## அ பிரிவு

**சரியான விடையை தேர்ந்தெடுக்க :**

1. தனி உரிமையாளரின் பயன்கள் என்ன?
   அ) சிறுமுதல் ஆ) அவசர முடிவு
   இ) வரையறு முதல் ஈ) மேலாண்மை திறனுக்கு எல்லை

2. கூட்டாண்மை ஏற்படுவது
   அ) சட்டத்தின் படி ஆ) வெளிப்படுத்திய உடன்படிக்கையின் படி
   இ) வம்சாவழி சொத்துரிமையின் படி ஈ) வெளிபடை (அ) உட்கிடை

3. பதிவு கட்டாயமாக்கப்பட்டுள்ள அமைப்பு
   அ) தனிவணிகர் ஆ) கூட்டாண்மை
   இ) கூட்டுபங்கு நிறுமம் ஈ) இந்த கூட்டு குடும்பம்

4. பாதுகாப்பு தொழிற்சாலைகளுக்கு ஏற்ற உகந்த தொழில்முறை அமைப்பு
   அ) அரசு நிறுமம் ஆ) பொதுக்கூட்டுரு
   இ) துறைமுறை அமைப்பு ஈ) வாரிய அமைப்பு

5. ஒரு பன்னாட்டு நிறுமம் ............. என அழைக்கப்படுகிறது.
   அ) உலக அளவில் பெரியது ஆ) கூட்டாண்மை
   இ) கூட்டுறவு சங்கங்கள் ஈ) பொது கூட்டுறவு

6. தனியாள் வணிகம் துவங்க
   அ) குறைந்த இருநபர்கள் தேவை ஆ) குறைந்தது ஏழு நபர்கள் தேவை
   இ) ஒரு நபர் மட்டும் தேவை

7. தனியாள் வணிகரின் பொறுப்பு
   அ) முதலுக்கு ஏற்ப வரையறுக்கப்பட்டது ஆ) சொத்து ஏற்ப வரையறுக்கப்பட்டது
   இ) வரையறாபொறுப்பு

8. உலகிலேயே தனிநபர் கட்டுபாடு தான் சிறந்தது என்று கூறியவர்
   அ) எச்.ஹேனே ஆ) வில்லியம் பேசட்
   இ) நைல் எச்.ஜெ. கோபி

9. கூட்டாண்மை உண்டாக்கப்படுவது
   அ) ஒப்பந்தத்தால் ஆ) கூட்டாளிகளிடையே உறவு
   இ) அரசின் வழிகாட்டல்

10. கூட்டாண்மையின் அடிப்படைக்கூறு
    அ) பூரண நல்ல நம்பிக்கை ஆ) முதலீட்டிற்கான தொகை இருத்தல்
    இ) கூடி தொழில் செய்ய வேண்டும்

11. கூட்டாண்மை பதிவு செய்தல்
    அ) 1949 சட்டம் ஆ) 1956 சட்டம் அ) 1932 சட்டம்

12. கூட்டாண்மையின் தோன்றும் உறவுமுறை

அ) முதல்வர் மற்றும் முகவர் ஆ) உரிமையர் மற்றும் வேலையாளர்

இ) எஜமானர் மற்றும் பணியாளர்

13. கூட்டாண்மை பதிவு

அ) கட்டாயம் ஆ) விருப்பத்தின் பேரில்

இ) அவசியமில்ல

14. பொது வரயறை நிறுமத்தில் குறைந்த அளவு உறுப்பினர்களின் எண்ணிக்கை

அ) 2 ஆ) 3

இ) 7 ஈ) 10

15. தனி வரையறை நிறுமத்தில் பங்குதாரரின் பொறுப்பு

அ) பங்குகளின் செலுத்தப்பெற்ற மதிப்பளவாகும் ஆ) பங்குகள் மீது செலுத்தப் பெறாதிருக்கும் மதிப்பு

இ) தனிப்பட்ட சொத்துக்களின் அளவாகும் ஈ) பங்குகள் மீது கோரப்பட்ட தொகை அளவாகும்

16. நிறுமமொன்றின் வாழ்வுக்காலம் முடிவுக்கு வருவது எப்பொழுது எனில்

அ) அதன் தோற்றுவிப்பாளர்கள் அனைவரும் இறந்தவுடன்

ஆ) இயக்குனர்கள் அனைவரும் இறந்தவுடன்

இ) அதிகமாக உறுப்பினர்கள் தங்கள் பங்குகளை பிறருக்கு மாற்றிக் கொடுத்து விட்டால்

ஈ) மேற்சொன்ன எதுவும் இல்லை

17. நிறுமங்கள் சட்டத்தில் கொடுக்கப்பட்ட அட்டவணை A என்றது

அ) நிகழ்ச்சி குறிப்பேட்டின் மாதிரி ஆ) இருப்பு நிலைக்குறிப்பின் மாதிரி படிவம்

இ) நிறுமச் செயல்முறை விதிகளின் மாதிரி ஈ) நிறும அமைப்பு முறையேட்டின் மாதிரி

18. தகவறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கும் குறைந்தளவு பங்கெடுப்பை கீழ்க்கண்ட நாட்களுக்குள் ஒரு பொது நிறுமம் பெற வேண்டும்

அ) 90 நாட்கள் ஆ) 120 நாட்கள்

இ) 130 நாட்கள் ஈ) 60 நாட்கள்

19. ஒரு நிறுமத்தின் கடனீட்டுப் பத்திரதாரர்கள் என்பவர் அதன்

அ) கடனாளர்கள் ஆ) உறுப்பினர்கள்

இ) கடன் வாடிக்கையர் ஈ) நிறுமத்தில் கடன்

20. ஒவ்வொரு கூட்டாளியும் தொழிலுக்கு வழங்கிய கடன் மற்றும் முன்பணம் மீது ஆண்டுக்கு வட்டி பெற உரிமை உண்டு

அ) 6 % ஆ) 10 %

இ) 12 % ஈ) வட்டியில்லை

21. பங்குகளை ஒறுப்பிழப்பு செய்ய காரணம்

அ) நிறுமத்திற்கு செலுத்த வேண்டிய கடன் தொகையை செலுத்த மறுத்தல்

ஆ) அழைப்பு பணத்தை செலுத்த தவறுவது

இ) ஆண்டு பொதுகூட்டத்தில் வன்முறைச் செயல்களில் ஈடுபடுதல்

22. .................. எண்ணிக்கைக்கு மிகாத பொது வரையறு நிறுமங்களில் ஒரே நேரத்தில் ஒரு நபர் இயக்குநர் பகுதி வகிக்கலாம்

அ) 10 ஆ) 15 இ) 20 ஈ) வரம்பில்லை

23.நிறுமச் செயலர் ஒருவர் நியமிக்கப்படுவது

அ) அரசால்
ஆ) இந்திய நிறுமச் செயலர்கள் அமைப்பால்
இ) இயக்குநர் அவையில்
ஈ) ஆண்டு பொதுக் கூட்டத்தில் பங்குநர்களால்

24.கூட்டத்தில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளின் வரிசையே .................. என்று கூறப்படுகிறது.

அ) நிகழ்ச்சி நிரல்
ஆ) நிகழ்ச்சி குறிப்பு
இ) தீர்மானம்
ஈ) குறைவெண்

25.ஒரு நிறுமத்தின் முதலாவது இயக்குநர்கள்

அ) சட்டமுறை கூட்டத்தில் உறுப்பினர்களால்
ஆ) முதலாவது ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் உறுப்பினர்களால்
இ) நிறுமச் செயல்முறை விதிகளில் பெயர் குறிப்பிடப்படுவதால்
ஈ) நிறுமப்பதிவாளரால் நியமிக்கப்படுகின்றனர்

26.இரு பொது ஆண்டுக் கூட்டங்களுக்கு உள்ள இடைவெளி

அ) 15 மாதங்களுக்கு மேல் செல்லக்கூடாது
ஆ) 12 மாதங்களுக்கு மேல் செல்லக்கூடாது
இ) 18 மாதங்களுக்கு மேல் செல்லக்கூடாது
ஈ) 20 மாதங்களுக்கு மேல் செல்லக்கூடாது

27.கீழ்கண்ட நிறுமங்களுள் எது சட்டமுறைக் கூட்டத்தை கூட்ட வேண்டும்

அ) சட்டமுறை நிறுமங்கள்
ஆ) தனிவரையற்ற நிறுமங்கள்
இ) பொது வரையறை நிறுமங்கள்
ஈ) பட்டய நிறுமங்கள்

28.இது புதிய நிறுமங்ககளின் முதல் விடுப்புகளை வெளியிடும்

அ) முதன்மைச் சந்தை
ஆ) இரண்டாம் நிலை சந்தை
இ) பொருட்கள் சந்தை
ஈ) ஒழுங்குமுறை விற்பனைச் சந்தை

29.எல்லாம் நன்மையாகவே நடைபெறும் என்ற மனப்பாங்கு கொண்டவர்

அ) காளை
ஆ) கரடி
இ) கலைமான்
ஈ) முடவாத்து

30.பத்திர ஒப்பந்த (ஒழுங்குபடுத்துதல்) சட்டம் இவ்வாண்டு நிறைவேற்றப்பட்டது

அ) 1952
ஆ) 1956
இ) 1964
ஈ) 1966

31. பங்கு மாற்றம் இதில் ஈடுபட்டிருக்கிறது

அ) சரக்கு
ஆ) சேவை
இ) நிலையான விலைகள்
ஈ) விலையில் மாற்றமேதுமிருக்காது

32.இந்தியாவிலுள்ள பங்கு மாற்றங்களின் எண்ணிக்கை

அ) 20
ஆ) 21
இ) 22
ஈ) 24

33.எதிலும் கெட்டதையே காண்கின்ற மனப்பாங்குகொண்டவர்

அ) காளை
ஆ) கரடி
இ) கலைமான்
ஈ) முடவாத்து

34.ஒரு காளை ஊக வணிகா இதை நம்புகிறார்

அ) விலைகள் உயருதல்
ஆ) விலைகள் குறையும்
இ) நலையான விலைகள்
ஈ) விலையில் மாற்றமேதுமிருக்காது

35.எச்சரிக்கையான ஊக வணிகர் ....................... எனப்படுவர்

அ) கலைமான் ஆ) காளை

இ) முடவாத்து ஈ) கரடி

36.சபைத்தலைவருடன் சேர்த்து செபியில் எவ்வளவு உறுப்பினர்கள் உள்ளனர்

அ) 5 ஆ) 7

இ) 6 ஈ) 8

37.கூட்டுறவு சங்கம் தொடங்கப்படுவது

அ) கிராமங்களில் மட்டும் ஆ) கிராமங்களிலும் நகரங்களிலும்

இ) பெரு நகரங்களில் மட்டும் ஈ) நகர்புறங்களில் மட்டும்

38.கூட்டுறவு குறைந்தபட்ச உறுப்பினர்களின் எண்ணிக்கை

அ) 2 ஆ) 7

இ) 10 ஈ) 25

39.மத்திய கூட்டுறவு வங்கி தொடங்கப்படுவது

அ) கிராமங்களில் ஆ) மாவட்ட தலைநகரங்களில்

இ) மாநில தலைநகரங்களில் ஈ) நகர்புறங்களில்

40.பங்காதாயம் கூட்டுறவில் - அடிப்படையில் பகிர்ந்தளிக்கப்படுகிறது

அ) பங்குமுதல் ஆ) பங்குகள் வாங்கிய அடிப்படையில்

இ) ஆதரவின் அடிப்படையில் ஈ) இவை எதுவும் இல்லை

41. கூட்டுறவு சிறப்பங்காடி அளிப்பது

அ) கடன் ஆ) சேவை

இ) சரக்குகள் ஈ) ரொக்கம்

42.முதன்முதலில் நுகர்வோர் கூட்டுறவு வெற்றிகரமாக விளங்கிய நாடு

அ) இங்கிலாந்து ஆ) அமெரிக்கா

இ) சுவிஷ் ஈ) இந்தியா

43.சிறுபான்மையினர் நலத்தைப் பாதுகாக்கும் தொழில் அமைப்பு

அ) தனிவணிகம் ஆ) கூட்டாண்மை

இ) கூட்டுறவுச் சங்கங்கள் ஈ) பொது நிறுமம்

44.அரசு நிறுமத்தில் அரசு கொண்டிருக்க வேண்டிய குறைந்தபட்ச பங்கு முதல்

அ) 51 % ஆ) 60 %

இ) 75 % ஈ) 90 %

45.பொதுக்கழகத்தினை மேலாண்மை செய்வது

அ) இயக்கு நரவை ஆ) அரசு அலுவலர்கள்

இ) இயக்குநர்கள் ஈ) இயக்குநர்கள் கமிட்டி

46.பொதுக்கழகத்தின் நிர்வாகம் இதைப் பெற்றிருக்கிறது.

அ) வரையறுக்கப்பட்ட சுதந்திரம் ஆ) செயல்பாட்டு சுதந்திரமின்மை

இ) கட்டுப்பாட்டுடன் கூடிய சுதந்திரம் ஈ) வரையறுக்கப்படாத செயல் சுதந்திரம்

47.சட்ட விலக்களிப்பு பெற்றுள்ள அமைப்பு .......................

அ) துறைவாரி அமைப்பு ஆ) பொதுக் கூட்டுறவு

இ) அரசு நிறுத்தம்

48.பொது வரையறு நிறுமத்தில் ஒட்டு மொத்த மேலாண்மை ஊதியம்

அ) நிகர லாபத்தில் 11% ஆ) செலுத்தப்பெற்ற முதலில் 11%

இ) நிகர லாபத்தில் 5% ஈ) செலுத்தப்பெற்ற முதலில் 5%

49.தன் வணிகர்கள் பங்கு மாற்றங்களில் இவர்களுக்கான வணிகத்தில் ஈடுபடுகிறார்கள்

அ) தங்களுடைய வாடிக்கையாளர்களுக்காக ஆ) தங்களுடைய சொந்த நடவடிக்கைகளுக்காக

இ) மற்றா தரகர்களுக்காக ஈ) மற்ற உறுப்பினர்களுக்காக

50.அரசு நிறுமம் இவற்றின் கீழ்ப் பதிவு செய்யப்படுகிறது

அ) மைய அல்லது மாநில அரசின் தனிச் சட்டம் ஆ) அரசு சாசனம்

இ) இந்திய நிறுமச் சட்டம் 1956 ஈ) அரசாங்கத்தின் ஆணை

சரியான விடையைச் தேர்ந்தெடு :

51. பின்வரும் சிறப்பியல்புகளில் எது தனி வணிகருக்கு ஏற்றதல்ல?

அ) தனி நபர் உரிமை ஆ) தனி மனித கட்டுபாடு

இ) எல்லா லாபமும் வணிகருக்கே ஈ) நெகிழ்ச்சி தன்மையற்றது

52.கூட்டாண்மை உடன்படிக்கை என்பது

அ) வாயளவில் இருக்க வேண்டும்

ஆ) எழுத்து வடிவில் இருக்க வேண்டும்

இ) முத்திரைத் தாளில் எழுத்து வடிவில் இருக்க வேண்டும்

ஈ) எழுத்து வடிவிலோ அல்லது மூலம் உறுப்புமை ஏற்படுவது

53.ஒரு குடும்பத்தில் பிறப்பின் மூலம் உறுப்புமை ஏற்படுவது

அ) தனி வணிகர் ஆ) இந்து கூட்டு குடும்பம்

இ) கூட்டுறவு சங்கம் ஈ) கூட்டாண்மை

54.கூட்டுறவு சங்கத்தில்

அ) ஒரு பங்கு ஒரு வாக்கு ஆ) ஒரு நபர் வாக்கு

இ) ஒரு நபர் இரு வாக்கு ஈ) ஒரு பங்குக்கு இரு வாக்கு

55.கூட்டுறவு சங்கங்கள் தொடங்கப்படுவது

அ) கிராமப்புறங்களில் ஆ) கிராமப்புறங்களிலும் நகர்ப்புறங்களிலும்

இ) நகரங்களில் மட்டும் ஈ) மாநில தலை நகரங்களில் மட்டும்

56.கூட்டு பங்கு நிறுமத்தின் மேலாண்மை ஒப்படைக்கப்பட்டிருப்பது

அ) நிறுமப் பதிவாளரிடம் ஆ) இயக்குனரவையிடம்

இ) பங்கு தாரர்களிடம் ஈ) கடன் பத்திரதாரர்களிடம்

57.தொழில் வடிவமைப்புகளில் மிகவும் பழமையானது

அ) தனியார் வணிகமுறை ஆ) கூட்டாண்மை

இ) கூட்டு பங்கு நிறுமம் ஈ) கூட்டுறவு சங்கம்

58.தனியார் வணிகத்தில் முடிவெடுப்பது

அ) விரைவாக ஆ) தாமதமாக

இ) மிக தாமதமாக ஈ) கலந்துரையாடி

59.தனியார் வணிக அமைப்பிற்கு ஏற்ற தொழில்கள்

அ) பேரளவு வியாபாரம் ஆ) நடுத்தர வியாபாரம்

இ) சிற்றளவு வியாபாரம்

60. ............. முகமைக் கோட்பாட்டின் விரிவாக்கம் என்று வர்ணிக்கப்படுகிறது

அ) கூட்டாண்மை ஆ) தனியாள் வணிகம்

இ) கூட்டு பங்கு நிறுமம் ஈ) கூட்டுறவு சங்கம்

61. உறங்கும் கூட்டாளி இவ்வாறு அழைக்கப்படுவர்

அ) உழைக்கும் கூட்டாளி ஆ) உழையாக் கூட்டாளி

இ) பெயளவு கூட்டாளி ஈ) முரண் தடை கூட்டாளி

62.கூட்டாண்மையின் வங்கித் தொழில் செய்ய அதிகபட்ச நபர்கள் .................

அ) 2 ஆ) 10

இ) 20 ஈ) 30

63.கூட்டாண்மையில் உள்ள கூட்டாளிகளை ஒட்டு மொத்தமாக .................. என்று அழைக்கின்றோம்?

அ) நிறுமம் ஆ) குடும்பம்

இ) நிறுவனம் ஈ) கூட்டுறவு சங்கம்

64.கீழ்க்கண்டவற்றுள் எது நாடாளுமன்ற அல்லது மாநில சட்ட மன்றங்கள் இயற்றிய சட்டத்தின் மூலம் உருவாக்கப்படுகின்றது

அ) பட்டய (அ) சாசன நிறுமம் ஆ) அயல்நாட்டு நிறுமம்

இ) அரசு நிறுமம் ஈ) சட்டமுறை நிறுமம்

65.தனி வரையறு நிறுமம் என்பது

அ) தொழில் கூட்டுரவாக்கச் சான்றிதழ் பெற்றவுடன்

ஆ) தொழில் தொடக்கச் சான்றிதழ் பெற்றவுடன்

இ) பதிவாளரிடமிருந்து தான் தேர்ந்தெடுத்துள்ள நிறுமம் பெயருக்கு ஒப்புதல் கிடைத்தவுடன்

ஈ) பதிவாளரிடம் நிறும அழைப்பிற்குரிய அனைத்து ஆவணங்களையும் தாக்கல் செய்த பின்னர் தொழில் தொடங்கலாம்

66.கீழ்கண்ட நிறுமங்களுள் எது பதிவாளரிடம் தகவலறிக்கைக்கு மாற்றிக்கையை தாக்கல் செய்ய வேண்டும்.

அ) பங்கு வெளியீடு மூலம் பொதுமக்களிடமிருந்த பங்கு முதல் திரட்டும் ஒரு பொது வரையறு நிறுமம்

ஆ) தன் இயக்குநர்கள் மற்றும் அன்னாரின் உறவினர்களிடமிருந்து முதல் தொகையை ஏற்பாடு செய்திருக்கும் ஒரு பொது வரையறு நிறுமம்

இ) ஒரு தனி வரையறு நிறுமம்

ஈ) இவை அனைத்து நிறுமங்களுமே

67.பங்குகளை வட்டத்தில் வெளியிட்டிருக்கும் பொழுது பங்கொன்றின் முக மதிப்பு ரூ. 100 எனில் அனுமதிக்கப் படும் உயர்ந்தளவு வட்டம்

அ) 5 ஆ) 10

இ) 20 ஈ) 15

68.ஒரு நிறுமத்தின் செயல்பாட்டு எல்லையை கீழ்கண்ட ஆவணங்களுள் எது உணர்த்துகிறது

அ) நிறுமத்தின் அமைப்பு முறையோடு ஆ) நிறும செயல் விதிகள்

இ) தகவலறிக்கை ஈ) சட்டமுறை உறுதி விளம்பல்

69.முன்னுரிமை பங்கு முன்னுரிமை பெற்றிருப்பது

அ) பங்காதாயம் பெறுவதில் மட்டும்

ஆ) நிறுமம் கலைப்பிற்குள்ளாகி முதல் தொகையை திருப்பி தரும்பொழுது மட்டும்

இ) வாக்குரிமை செலுத்துவதில்

ஈ) பங்காதாயம் பெறுவதில் நிறுமம் கலைப்பின் போது பங்கு முதலை திரும்ப பெறுவதில்

70.தகுதி பெற்ற நிறும செயலாளரை நியமித்தல் கீழ்கண்டவற்றில் எந்த நிறுமத்தில் கட்டாயமாக்கப்பட்டுள்ளது?
அ) செலுத்தப்பெற்ற பங்கு முதல் 5,00,000 க்கு கூடுதலாக இருக்கும் நிறுமம்
ஆ) செலுத்தப்பெற்ற பங்கு முதல் 50,00,000 க்கு கூடுதலாக இருக்கும் நிறுமம்
இ) செலுத்தப்பெற்ற பங்கு முதல் 25,00,000 க்கு கூடுதலாக இருக்கும் நிறுமம்
ஈ) செலுத்தப்பெற்ற பங்கு முதல் 15,00,000 க்கு கூடுதலாக இருக்கும் நிறுமம்

71. முதலீடு செய்த தொழிலை நிர்வகிக்கும் பொறுப்பேற்றுள்ள கூட்டாளி
அ) உறங்கும் கூட்டாளி ஆ) பெயரளவு கூட்டாளி
இ) மேலாண்மை கூட்டாளி ஈ) இலாபத்தில் மட்டும் பங்கேற்கும் கூட்டாளி

72.கீழ்கண்ட சூழ்நிலைகளுள் எப்பொழுது கடனீட்டு பத்திரதாரர்கள் வட்டி பெறும் உரிமை பெற்றுள்ளனர்?
அ) நிறுமம் இலாபம் ஈட்டும் பொழுது மட்டும் ஆ) பங்குநர்கள் பங்காதாயம் பெறும் பொழுது
இ) நட்டம் ஏற்படும் ஆண்டு உட்பட எந்த ஆண்டிலும் ஈ) மேற்சொன்ன அனைத்துமான

73.ஒரு இயக்குநர்
அ) நிறுமத்தின் முகவராக ஆ) நிறுமத்தின் முதன்மை நிர்வாக அதிகாரியாக
இ) நிறுமத்தின் பொறுப்பாண்மையர் (அ) நம்புறதியாண்மையராக ஈ) மேற்சொன்ன அனைத்துமான

74.ஒரு பொது வரையறு நிறுமத்தில் இயக்குநர் ஒருவர் வைத்திருக்க வேண்டிய தகுதி பங்குகளில் மதிப்பு
அ) ரூ. 5000 க்கு ஆ) ரூ. 50,00,000 க்கு
இ) ரூ. 50,000 க்கு ஈ) ரூ. 500 க்கு

75.எல்லாம் அவரே அவரே எல்லாம் இக்கோட்பாட்டின்படி இயங்கும் அமைப்பு
அ) தனியாள் வணிகம் ஆ) கூட்டுறவு சங்கம்
இ) இந்து கூட்டு குடும்பம் ஈ) கூட்டாண்மை

76.ஆண்டு பொது கூட்டத்தில் கீழ்கண்டவற்றுள் எந்த நடவடிக்கை வழக்கமாக மேற்கொள்ளப்பட மாட்டாது?
அ) தணிக்கையர் நியமனம் ஆ) கனீட்டு பத்திர வெளியீடு
இ) பதவி விலகுமிடத்திற்கு இயக்குநர்களை நியமித்தல் ஈ) பங்காதாயம் விளம்பல்

77.புதிய பங்குகளை விற்க வழக்கமாக பயன்படுத்தும் முறை
அ) பொது விடுப்புகள் ஆ) விற்பனைக்கான தருமொழி
இ) மேலாண்மை தரகர்கள் ஈ) ஒப்புறுதியளித்தல்

78.பங்கு மாற்றங்கள் இவற்றின் வணிகத்தை அனுமதிக்கிறது
அ) நிறுமத்தின் எல்லா பங்குகளையும் ஆ) பட்டியலிடப்பட்ட பத்திரங்கள்
இ) அரசால் வெளியிடப்படுகின்ற பிணையங்கள் ஈ) பட்டியலிடப்படாத பத்திரங்கள்

79.செபி இச்சட்டத்தின்படி உருவாக்கப்பட்டது
அ) பத்திர ஒப்பந்த (ஒழுங்குப்படுத்துதல்) சட்டம் ஆ) இந்திய பத்திர மற்றும் வாரிய சட்டம்
இ) இந்திய அரசியல் சாசனம் ஈ) நிறுமங்கள் சட்டம்

80.பங்கு மாற்றகம் ஊக வணிகத்தை
அ) அனுமதிப்பதில்லை ஆ) ஊக்கப்படுத்துவதில்லை
இ) ஊக்கப்படுத்துகிறது ஈ) தடைசெய்யும்

81. பங்கு மாற்றகம் இதற்கான ஒரு இடமாகும்
அ) ஒரு பத்திரத்தை மற்றொரு பத்திரமாக மாற்றுதல் ஆ) நிதிபத்திரங்களை வாங்கி விற்பது
இ) சரக்குகளை வாங்கி விற்பது ஈ) புதுப்பங்குகளை வெளியிடுவது

82.கூட்டுறவு சங்கத்தில் உறுப்பினர்களின் உச்ச அளவு

அ) 6 ஆ) 60
இ) 100 ஈ) வரையறை இல்லை

83.பொதுமக்களும் இந்நிறுவனத்தின் பங்குகளை வாங்கலாம்

அ) துரைவாரி அமைப்பு ஆ) பொதுக்கழகம்
இ) அரசு நிறுமம் ஈ) மேற்கூரிய எதுமில்லை

84.அரசுத் தொழில்கள் மிகச் செம்மையாக இயங்குவதற்கு மிகவும் உகந்தது என பொதுவாக கருதப்படும் வடிவமைப்பு

அ) துறைவாரி அமைப்பாகும் ஆ) பொதுக்கழகமாகும்
இ) அரசு நிறுமமாகும் ஈ) கூட்டு பங்கு நிறுமமாகும்

85.இந்திய தொலைபேசி நிறுவனம் எதற்கு எடுத்துக்காட்டாகும்

அ) துரைவாரி அமைப்பு ஆ) பொதுக் கூட்டுரு
இ) அரசு நிறுமம் ஈ) இணைவினை

<u>கோடிட்ட இடத்தை நிரப்புக :</u>

86. இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகம் .................................... ற்கு உதாரணமாகும்
87. தனி வணிகரின் பொறுப்பு ...........................
88. பொதுவாக தனியார் வணிக அமைப்புகள் ............. அளவில் செயல்பட்டு வருகின்றன.
89. கூட்டாண்மையில் உள்ள அனைவரையும் ஒட்டுமொத்தமாக ............. என்றழைக்கின்றோம்.
90. வங்கித் தொழில்சாரா பிற நிறுவனங்களின் கூட்டாண்மையில் அதிகபட்ச நபர்களின் எண்ணிக்கை .......... ஆகும்.
91. கூட்டாளிகள் பொறுப்பு ....................... பொறுப்பாகும்.
92. ...................... என்பது கூட்டாளிகளின் உடன்பாடு முடிவுக்கு வரவதாகும்.
93. தனி வரையறு நிறுமமொன்றில் குறைந்தளவு உறுப்பினரின் எண்ணிக்கை ................
94. ஒரு பொது வரையறு நிறுமம் தனது பங்குகள் (அ) கடனீட்ட பத்திரங்களை காக்குமாறு பொதுமக்களிடம் அழைப்பு விடும் விளம்பரத்திற்கு பெயர் ....................
95. நிறுமத்தின் முதலாவது இயக்குநர்கள் வழக்கமாக .................... இல் பெயரிட்டிருப்பர்
96. இயக்குநர்கள் நிறுமத்தின் ....... பொறுப்புறுதியாண்மையராகவும், அதிகாரிகளாகவும் செயல்படுகிறார்கள்.
97. செயல்முறை விதிகளில் மாற்றம் செய்ய .................... தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும்.
98. பொதுவாக தணிக்கையர் ........... கூட்டத்தில் நியமிக்கப்பட்ட ஊதியமும் நிர்ணயிக்கப்படும்.
99. கடன் பத்திரங்கள் .............. உரிமையை குறிக்கும்.
100. இரண்டாம் நிலை சந்தை, முதன்மைச் சந்தையில் விற்கப்பட்ட ............ களின் வணிகத்தில் ஈடுபட்டுள்ளது.
101. போல்ட் என்பது ............. பங்கு சந்தையில் உபயோகத்தில் உள்ள ஒரு நேரடி வணிக முறையாகும்.
102. கோ – ஆப்பபெரி என்ற இலத்தீன் மொழியின் பொருள் .................
103. கூட்டுறவு சங்கத்தின் மேலாண்மை ....................... கொண்டது.
104. .......... துறையில் நுகர்வோரும், பணியாளர்களும் சுரண்டப்படுவதை பரவலாகக் காணப்படும்.
105. அரசுத் தொழில்களின் முதன்மையான நோக்கம் ..............................

106. வேலைப்பகிர்வு முறை என்பது .......................

107. தொலைதூர ஒலிபரப்பு ....................... அமைப்பின் கீழ் வருகிறது.

108. தமிழ்நாடு மின்சார வாரியம் .................. க்கு எடுத்துக்காட்டாகும்.

109. பொதுக் கூட்முருவை ....................... என கூறலாம்.

110. நிறுவனத்தில் பங்கேற்காத கூட்டாளிகை ................... என்றழைக்கின்றோம்.

111. பதிவு செய்யா கூட்டாண்மை நிறுவனம் மூன்றாம் நபருக்கு எதிராக தொகை ................ மேல் திரும்ப பெற இயலாது.

112. அவசர காலங்களில் கூட்டாண்மையின் நலனை பாதுகாக்க ஒரு கூட்டாளிக்கு வழங்கப்படும் உரிமை........

113. பொறுப்புறுதியில் வரையறுக்கப்பட்ட நிறுமம் ஒன்றின் உறுப்பினரின் பொறுப்பு ...............

114. தனக்கென்று தனியானதொரு செயல்முறை விதிகளை வகுத்துக்கொள்ள தேவையில்லாத நிறுமம் ..........

115. தகுதிப்பங்குகளின் மொத்த இயல் மதிப்பு ................ ரூபாயை மிகக்கூடாது.

116. மைய அரசு அனுமதித்த நாளிலிருந்து ......... மாதங்களுக்குள் பங்குகளை வட்டத்தில் வெளியிட வேண்டும்

117. பங்குநர் ஒருவருக்கு பதிவாக கூட்டத்தில் கலந்து கொள்ள நியமிக்கப்படும் நபர் ................ என அழைக்கப் பெறுகிறார்.

118. மேலாண்மை ஊதியம் ஒர நிறுமத்தின் நிகரலாபத்தில் .................. விழுக்காட்டிற்கு மிகக்கூடாது.

119. ஒரு பொது வரையறு நிறுமக் கூட்டத்தில் கலந்துகொள்ள வேண்டிய உறுப்பினர் குறைவெண் ....... ஆகும்.

120. ................ புதிய பங்குகளை வெளியிட இடைத்தரகர்களாக செயல்படுகின்றன.

121. விண்ணப்ப தொகை ஒரு பங்கின் இயல் மதிப்பில் .............. சதவீதத்துக்கு குறைவாக இருத்தல் கூடாது.

122. தீர்வுப் பத்திரங்கள் ....................... எனவும் அழைக்கப்படும்.

123. ................ என்பவர் பங்குச்சந்தை உறுப்பினரால் அமர்த்தப்பட்ட பணியாள் ஆவாய்.

124. ஆரம்ப பொது வெளியீட்டிற்கு மாற்றாக ........................ இருக்கின்றன.

125. கூட்டுறவு இயக்கத்தின் தந்தை ..............................

126. சிறப்பங்காடி எனப்படுவது பேரளவில் செயல்படும் ......................... அமைப்பு.

127. உறுப்பினர் சேவை என்பது இதன் முக்கிய குறிக்கோள் .....................

128. கூட்டுறவு சங்கத்தில் .................... விழுக்காடு மட்டுமே பங்காதாயமாக பகிர்ந்தளிக்கப்படுகிறது.

129. பொதுக்கழகங்கள் மத்திய அரசு (அ) மாநில அரசின் .................... உருவாக்கப்படுகிறது.

130. அரசுத் தொழில் வடிவமைப்புகளில் மிகவும் தொன்மையானது ........................

131. பொதுக்கழகத்தை அரசால் நியமிக்கப்பட்ட .................. நிர்வாகம் செய்கின்றது.

132. அரசு நிறுமத்தில் குறைந்தபட்சம் ................. பங்குகளை அரசு எடுத்து வைத்திருக்கும்

133. இராணுவ பொருட்களை உற்பத்தி செய்வதற்கு ஏற்ற தொழிலமைப்பு .................... அமைப்பேயாகும்.

134. குறுமபங்கொப்பம் வெளியிடப்படும் பங்கு முதலில் ....................% நிர்ணயிக்கப்படுகிறது.

135. ஆயுத்த கொடுப்பு ஒப்பந்தங்கள் .................. எனவும் அழைக்கப்படும்.

நிரப்புக :

136. ஒப்படைப்பு என்பது ........................ என்பதாகும்.

137. கூட்டாளிகள் இலாப நட்டங்களை ...................... பகிர்ந்து கொள்வர்

138. இந்தியாவில் கூட்டாண்மை பதிவு என்பது ...........................

139. ஒரு நிறுமம் என்பது ................. கருதப்பட்டது.
140. அரசாங்கத்தின் கொள்கைகள் ........................ சாதகமாக உள்ளது.
141. அரசு நிறுமத்தின் ஊழியர் .............................. அல்ல.
142. கூட்டுறவு சங்கத்தின் எல்லா உறுப்பினர்களும் ......................
143. ..................... தனியாள் வணிகரின் உழைப்பிற்கு தூண்டுகோலாய் அமைகிறது.
144.கோ கோ கோலா கழகம் ................. க்கு எடுத்துக்காட்டாகும்.
145. கூட்டாண்மை நிறுவனத்தில் இலாப நட்டத்தை ................... பிரித்துக் கொள்வர்.
146. உழைக்கும் கூட்டாளி ...................... எனவும் அழைக்கப்படுகிறது.
147. கூட்டாண்மை உண்டாக்கப்படுவது ......................
148. தொழில் முதலீடுவார் ஆனல் நிறுவனத்தில் பங்கேற்காத கூட்டாளியை ........ என்று அழைக்கப்படுகிறோம்
149. ................. வணிகத்தில் வியாபார இரகசியங்கள் காக்கப்படுகிறது.
150. தனியாள் வணிகத்திற்கு ஏற்ற தொழில்கள் ......................
151. தன் செய்கைகள் மூலம் அவசர காலங்களில் நடவடிக்கைகளை மேற்கொள்ள ஒரு கூட்டாளிக்கு வழங்கப்படும் உரிமை .................... ஆகும்.
152. ஒரு கூட்டாளியின் அறிவிப்பின் பேரில் கலைக்கப்படும் கூட்டாண்மை ................... ஆகும்.
153. .................... என்பது ஒரு குறிப்பிட்ட திட்டத்தை நிறைவேற்றவோ அல்லது குறிப்பிட்ட கால வரையறைக்கு மட்டுமோ தற்காலிகமாக ஏற்படுத்தப்பட்ட ஒரு கூட்டாண்மையாகும்.
154. ஒரு கூட்டாளிக்கு கிடைக்கும் இலாபத்தை இன்னொரு நபர் பங்கிட்டு கொண்டால் அந்நபர் ................
155. ............... என்பது கூட்டாளிகளின் உடன்பாடு முடிவுக்கு வருவதாகும்.
156. ஒரு தனியாள் வணிக உரிமையாளரின் ............. திறமைக்கு எல்லை உண்டு.
157. எந்த பெயரில் கூட்டாண்மை தொழில் நடத்தப்படுகிறது அதுவே ............... ஆகும்.
158. ................... வணிகத்தை ஒழுங்குபடுத்த தனியாக சட்டம் ஏதுமில்லை.
159. ................... கலைப்பு என்பது அனைத்து கூட்டாளிகளுக்கிடையே நிலவும் உறவு முறிந்த விடுதலாகும்.
160. கூட்டாண்மை கலைக்கும் தனது விருப்பத்தை அறிக்கையாகவே ஒரு கூட்டாளி வெளியிட்டால் கலைக்கப் படுவது ............................ ஆகும்.
161. தனியாள் வணிகம் துவங்க ................. நபர் தேவை.
162. ஒரு நிறுமத்தின் அக மேலாண்மை குறித்த விவரங்கள் அடங்கியிருப்பது .................
163. தனி வரையறு நிறுமத்தில் குறைந்தது ................... இயக்குனர்களாவது இருக்க வேண்டும்.
164. நிலுவையிலுள்ள பங்காதாயம் பெற உரிமையுள்ள முன்னுரிமை பங்குகள் .................................... என அழைக்கப்படுகின்றன.
165. 6000 இயல் மதிப்புடைய பங்குகளை வெளியிட்டிருக்கும் நிறுமத்தில் ஒரு இயக்குநர் வைத்திருக்க வேண்டிய தகுதிப் பங்குகளின் எண்ணிக்கை ......................
166. பொது வரையறை நிறுமத்தில் குறைந்தளவு இருக்க வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கை ...............
167. கிழக்கிந்திய கம்பெனி ................ நிறுமத்திற்கு எடுத்துக்காட்டாகும்.
168. பங்குதாரர்கள் நிறுமத்தின் உண்மையான ..................
169. பங்குகளின் வெளியீட்டு விலை முகமதிப்பைவிட அதிகமாக இருந்தால் ................
170. கடனீட்டு பத்திரம் என்பது ................ குறிக்கும்.

199. பங்கு மாற்றகத்தின் அலுவல் பட்டியலில் பங்குகளின் பெயரை இடம் பெற செய்வது ............... எனப்படும்.

200...................... என்பவர் பங்குசந்தை உறுப்பினரால் அமர்த்தப்பட்ட பணியாளர் ஆவார்.

201. ............... இந்திய பங்கு சந்தையை ஒழுங்குப்படுத்துவதற்கக ஏற்படுத்தப்பட்ட மேற்பார்வை அமைப்பாகும்

202.கணிபொறி மூலம் பங்குகள் பரிவர்த்தவை போல் பின்பற்றப்படுவது ................ பங்கு சந்தையில் ஆகும்.

203. ..................... என்பவர் கலைமான் ஆவார்.

204.பொதுத்துறை நிறுவனங்களுக்கு பட்டியலிடுதல் ................ ஆக்கப்பட்டிருக்கிறது.

205.கூட்டுறவு சங்க உறுப்பினர்களின் பொறுப்பு ....................

206.உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத்தை அமைப்பது .................

207.நுகர்வோர்கள் .................... மதிக்கப்படுகிறார்கள்.

208.வேளாண்மை கடன் சங்கம் (அ) ஊரக நாணய சங்கம் ............... என பிரிக்கப்படும்.

209.ஏற்கனவே தனியார் துறையில் இயங்கி வரும் தொழில்களை அரசு நடத்தினால் அதனை ....................... எனப்படும்.

210. .................. துறையில் நுகர்வோரும், பணியாளர்களும் சுரண்டப்படுவது பரவலாக காணப்படும்.

211. பொது நிறுவனம் என்பது ......................... சொந்தமானதாகவும் அதன் கட்டுப்பாட்டிற்குட்பட்டும் இயங்கம் தொழிலமைப்பாகும்.

212. .................. ஒரு சிலரிடம் பொருளாதாரம் வலிமை செறிவதை தடை செய்கிறது.

213. ஒரு பங்கு சான்றிதழ் வெளிப்படுத்துவது ...............................

214. கூட்டாளிகளுக்கு ஒரு உடன்பாட்டின்படி உரிமைகள் வழங்கப்பட்டிருப்பின் அது ..............................

215. ஒரு தனியாள் வணிக அமைப்புக்கு சொந்தகாரராக இருப்பவர் ஒரு .....................

216. கூட்டாண்மை நிறுவனத்தின் மேலாண்மையின் அதிக பங்கு வகிக்கும் கூட்டாளி .............................

217. தனியாள் வணிகத்தின் அளவு ............................

218. கூட்டத்தில் வைக்கப்படும் முன்மொழியை நிறைவேற்றபடுமாயின் அது ................ ஆகும்.

## விடைகள் :

1. வரையறு முதல்
2. வெளிப்படுத்திய உடன்படிக்கையின் படி
3. கூட்டுபங்கு நிறுமம்
4. துறைமுறை அமைப்பு
5. உலக அளவில் பெரியது
6. ஒரு நபர் மட்டும் தேவை
7. வறையறா பொறுப்பு
8. வில்லியம் பேசட்
9. ஒப்பந்தத்தால்
10. பூரண நல்ல நம்பிக்கை
11. 1932
12. முதல்வர் மற்றும் முகவர்
13. விருப்பத்தின் பேரில்

14. 7
15. பங்குகள் மீது செலுத்தப் பெறாதிருக்கும் மதிப்பு
16. மேற்சொன்ன எதுவுமில்லை
17. நிறும செயல்முறை விதிகளின் மாதிரி
18. 90 நாட்கள்
19. கடனாளர்கள்
20. 6%
21. அழைப்பு பணத்தை செலுத்த தவறுவது
22. 15
23. இயக்குநர் அவையால்
24. நிகழ்ச்சி நிரல்
25. நிறுமச் செயல்முறை விதிகளின் பெயர் குறிப்பிடப்படுவதால்
26. 15 மாதங்களுக்கு மேல் செல்லக்கூடாது
27. பொது வரையறை நிறுமங்கள்
28. முதன்மைச் சந்தை
29. காளை
30. 1956
31. நிதிப்பத்திரங்கள்
32. 21
33. கரடி
34. விலைகள் உயருதல்
35. கலைமான்
36. 6
37. கிராமங்களிலும் நகரங்களிலும்
38. 25
39. மாவட்ட தலைநகரங்களில்
40. ஆதரவின் அடிப்படையில்
41. சரக்குகள்
42. இங்கிலாந்து
43. கூட்டுறவு சங்கங்கள்
44. 51%
45. இயக்குநரவை
46. வரையறுக்கபடாத செயல்சுதந்திரம்
47. துறைவாரி அமைப்பு
48. நிகர லாபத்தில் 11%
49. தங்களுடைய சொந்த நடவடிக்கைகளுக்காக
50. இந்திய நிறும சட்டம் 1956

51. நெகிழ்ச்சி தன்மையற்றது
52. முத்திரை தாளில் எழுத்து வடிவில் இருக்க வேண்டும்
53. இந்து கூட்டுக் குடும்ப வணிகம்
54. ஒரு நபர் ஒரு வாக்கு
55. கிராமப்புறங்களிலும் நகர்புறங்களிலும்
56. இயக்குநரவையிடம்
57. தனியாள் வணிகம்
58. விரைவாக
59. சிற்றளவு வியாபாரம்
60. கூட்டாண்மை
61. உழையாக் கூட்டாளி
62. 10
63. நிறுவனம்
64. பட்டய (அ) சாசன நிறுவனம்
65. தொழில் கூட்டுருவாக்க சான்றிதழ் பெற்றவுடன்
66. தன் இயக்குநர்கள் மற்றும் அன்னாரின் உறவினர்களிடமிருந்து முதல் தொகையை ஏற்பாடு செய்திருக்க ஒரு பொது வரையறு நிறுமம்
67. 10
68. நிறுமத்தின் அமைப்பு முறையேடு
69. பங்காதாயம் பெறுவதில், நிறும கலைப்பின் போது பங்கு முதலை திரும்ப பெறுவதில்
70. செலுத்தப் பெற்ற பங்கு முதல் 50,00,000 க்கு கூடுதலாக இருக்கும் நிறுமம்
71. மேலாண்மை கூட்டாளி
72. நட்டம் ஏற்படும் ஆண்டு உட்பட எந்த ஆண்டிலும்
73. மேற்சொன்ன அனைத்துமாக
74. ரூ. 5000
75. தனியாள் வணிகம்
76. கடனீட்டு பத்திர வெளியீடு
77. பொது விடுப்புகள்
78. பட்டியலிடப்பட்ட பத்திரங்கள்
79. இந்திய பத்திர மற்றும் வாரிய சட்டம்
80. ஊக்கப்படுத்துகிறது
81. நிதி பத்திரங்களை வாங்கி விற்பது
82. வரையறை இல்லை
83. அரசு நிறுமம்
84. பொதுக்கழகம்
85. துறைவாரி அமைப்பு
86. பொதுக் கழகம்

87. வரையறா பொறுப்பு
88. சிறிய
89. நிறுவனம்
90. 20
91. வரையறா
92. கூட்டாண்மை கலைப்பு
93. 2
94. தகவலறிக்கை
95. செயல்முறை விதிகளில்
96. முகவராகவும்
97. சிறப்பு
98. ஆண்டு பொதுக்கூட்டத்தில்
99. கடனீட்டு
100. பத்திரங்களின் மறு விற்பனை
101. மும்பை
102. இணைந்து பணியாற்றுதல்
103. மக்களாட்சி தன்மை
104. தனியார்
105. பொது சேவை, பொது நலன்
106. துறைப்படுத்துதல்
107. துறைமுறை அமைப்பு
108. வாரிய அமைப்பு
109. சட்டமுறை நிறுமம்
110. உழையா கூட்டாளி
111. ரூ. 100க்கு
112. உட்கிடை ஆணையுரிமை
113. வரையறுக்கப்பட்டது
114. தனிவரையறு நிறுமம்
115. ரூ. 5000
116. 2 மாதங்கள்
117. பகராள்
118. 11 %
119. 5
120. வெளியீட்டகங்கள்
121. 5 %
122. முன்னோக்கிய பட்டியல் பத்திரங்கள்
123. அதிகாரமளிக்கப்பட்ட எழுத்தர்

124. பரஸ்பர நிதியகங்கள்

125. இராபர்ட் ஓவன்

126. சில்லரை

127. கூட்டுறவு சங்கம்

128. 14 %

129. தனிசட்டத்தால்

130. துறைமுறை அமைப்பு

131. இயக்குநரவை

132. 51 %

133. துறைமுறை அமைப்பு

134. 90 %

135. அவ்விடத்து பேரங்கள்

136. ஒப்படைத்தல்

137. ஒப்புக்கொண்ட படி

138. விருப்பத்தின் பேரில்

139. புனைவு நபராக

140. பன்னாட்டு நிறுமத்திற்கு

141. அரசு ஊழியர்

142. சமம்

143. நட்டவச்சம்

144. பன்னாட்டு நிறுமம்

145. ஒப்புக்கொண்டபடி

146. மேலாண்மை கூட்டாளி (அ) பணிபுரியும் கூட்டாளி

147. உடன்பாட்டால்

148. உழையா / உறங்கும் கூட்டாளி

149. தனியாள் வணிகத்தில்

150. சிற்றளவு வியாபாரம்

151. உட்கிடை ஆணையுரிமை

152. விருப்பமுறிக் கூட்டாண்மை

153. இணைவினை

154. துணைக்கூட்டாளி

155. கூட்டாண்மை கலைப்பு

156. மேலாண்மை

157. நிறுவனப் பெயர்

158. தனியாள்

159. நிறுவன கலைப்பு

160. விருப்பமுறி அறிவிக்கையால் கலைப்பு

161. ஒரு நபர்
162. செயல்முறை விதிகள்
163. 2
164. குவி முன்னுரிமை பங்குகள்
165. ஒன்று
166. 7
167. பட்டய (அ) சாசன நிறுமம்
168. உரிமையாளர்கள்
169. பங்கு முனைமம்
170. கடனீட்டு உரிமை
171. மீள்தகு கடனீட்டு பத்திரம்
172. வட்டத்தில்
173. 6, 1
174. 21 நாட்கள்
175. 15 மாதங்கள்
176. 21 நாட்கள்
177. குறைவெண்
178. சாதாரண தீர்மானம்
179. 2
180. சாதாரண தீர்மானம்
181. 2
182. பேரளவு முதல்
183. கடனீட்ட பத்திரம்
184. பொது விடுப்பு
185. தகவலறிக்கை
186. முதன்மை சந்தை
187. 21
188. கட்டாயம்
189. உசித ஆணை
190. நீண்ட
191. முன்னெச்சரிக்கையான ஊரக வணிகர் (அ) முனைம வேட்டையாளர்
192. பரஸ்வர நிதியங்கள்
193. கூட்டு பங்கு நிறுமங்கள்
194. பங்கு
195. புதிய
196. மேலாண்மை தரகர்கள்
197. பங்குதாரர்
198. இரண்டாம் நிலை சந்தை
199. பட்டியலிடுதல்
200. அதிகாரமளிக்கப்பட்ட எழுத்தர்

201. செபி
202.மும்பை
203.முன்னெச்சரிக்கையான ஊக வணிகர்
204.கட்டாயம்
205.வரையறு பொறுப்பு
206.சிறு உற்பத்தியாளரங
207.மன்னர்களாக
208.பிரதம நாணய சங்கம்
209.நாட்டுடமையாக்கம்
210. தனியார்
211. அரசுக்கு
212. பொதுதுறை
213. மேற்சொன்ன அனைத்தும்
214. வெளிப்படை ஆணையுரிமை
215.
216. உழைக்கும் கூட்டாளி
217. சிற்றளவு
218. தீர்மானம்

## வரைவிலக்கணம்

**ஆ பிரிவு** 50x4=200

**விடைகள் நான்கு வரிகளில் தருக :**

**1. அமைப்பை வரையறு**

ஆலன் லூயி அவர்களின் கூற்றுப்படி, ‘‘செய்ய வேண்டிய பணியினை அறிந்து அதனை தொகுதிகளாக பிரித்தலும் குறிக்கோளை அடைய பணியாளர்களால் பயன்தரு முறையில் உழைக்கும் நோக்குடன் அவர்களுக்கிடையே உறவு முறைகளை ஏற்படுத்தும் பொறுப்பையும், ஆணையுரிமைகளையும் வரையறுத்து வழங்கலையும்’’ அமைப்பு என்னும் சொல் குறிக்கும். அல்லது ஏதேனும் ஒரு வரைவிலக்கணம்.

**2. தரவரிசை முறைக்கோட்பாடு என்றால் என்ன?**

ஆணையுரிமையின் வரிசை உயர்மட்டத்திலுள்ள உயர் அலுவலரிடமிருந்து கீழ்மட்டத்திலுள்ள தொழிலாளர்கள் வரை படிப்படியாக கீழ்நோக்கி வர வேண்டும். இதற்கு ‘கட்டளை இணைப்பு’ என்று பெயர். ஓர் உணர் அலுவலர்தனக்குக் கீழ் பணியாற்றும் பணியாளருக்கு ஒப்படைக்கும் பணியை திறமையாக செய்து முடிக்கும் பொறுப்பை பணியாளர் ஏற்கிறார்.

**3. கர்த்தா என்பவர் யார்?**

(இந்து கூட்டுக் குடும்பத்தில்) ஒரே குடும்பத்தில் பிறந்தவர்களில் குடும்பத் தலைமை உறுப்பினருக்கு கர்த்தா என்று பெயர். இவர் மேலாண்மை செயலதிகாரி போல் குடும்பத்தை நடத்துவார்.

**4. பன்னாட்டு நிறுமத்தின் எடுத்துக்காட்டுகளைத்தருக.**

1. யூனிலீவர் லிமிடெட் – பிரிட்டீஸ் நிறுமம் (இதன் துணை நிறுமம் இந்துஸ்தான் லீவர் லிமிடெட்)
2. யூனியன் கார்பைடு – அமெரிக்காவை சார்ந்தது.

3. இன்டர்நேஷனல் பிசினஸ் மெஷின் – (அமெரிக்கா)
4. பிலிப்ஸ் – டச்சு நிறுமம் (இப்போது பிசியோ எலக்ட்ரிக்கல்ஸ்)
5. கோகோ கோலா கழகம் (அமெரிக்கா)

**5. வாரிய அமைப்பு குறிப்பு வரைக**

இந்த அமைப்பின் மேலாண்மை அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட ஒரு குழுவிடம் உள்ளது. இது தனி சட்டங்களால் ஒழுங்குபடுத்தப்படுகிறது.

எ.கா. தமிழ்நாடு மின்சார வாரியம், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியம்

## பாடம் 2

**6. தனியாள் வணிகர் வரைவிலக்கணம் தருக.**

தனிநபரால், தனி நபருக்கென்று அமைக்கப்பட்டு இயங்கும் ஒரு வணிகம் தனி ஆள் வணிகம் என முனைவர் ஓ.ஆர். கிருஷ்ணசாமி வரையறுக்கிறார். (அல்லது ஏதேனுமொரு வரைவிலக்கணம்)

**7. வரையறாப் பொறுப்பு என்றால் என்ன?**

தனியாள் வணிகத்தில் உரிமையாளரின் பொறுப்பு வரையறுக்கப்படாதது. இதனால் தனி வணிகர் தன் வியாபாரக் கடன்களை செலுத்த தொழிலின் சொத்துக்கள் போதுமானதாக இல்லாவிடில், தன் சொந்தசொத்துக்களிலிருந்தும் கடனீந்தோருக்கு செலுத்த வேண்டும். கடனீந்தோர் உரிமையாளரின் சொத்துக்களை பறிமுதல் செய்ய உரிமை பெறுவார்.

## பாடம் 3

**8. கூட்டாண்மை வரைவிலக்கணம் தருக.**

1932–ஆம் ஆண்டு, இந்திய கூட்டாண்மைச் சட்டத்தின் 4–வது பிரிவின்படி, கூட்டாண்மை என்பது, "எல்லோரும் சேர்ந்தோ" அல்லது எல்லோருக்குமாக ஒருவரோ, நடத்தும் தொழிலின் இலாபத்தைப் பகிர்ந்து கொள்ள ஒப்புக்கொண்டவர்களிடையே நிலவும் உறவு" என கூறுகிறது. (அல்லது ஏதேனுமொரு வரைவிலக்கணம்)

**9. ஒரு கூட்டாண்மையின் உட்கிடை ஆணையுரிமை வரைவிலக்கணம் தருக.**

அவசர காலங்களில் கூட்டாண்மையின் நலனைப் பாதுகாக்கும் பொருட்டு சில நடவடிக்கைகளை மேற்கொள்ள ஒரு கூட்டாளிக்கு வழங்கப்படும் உரிமைக்கு உட்கிடை ஆணையுரிமை என்று பெயர். அவரின் நடவடிக்கைகள் கூட்டாண்மையை கட்டுப்படுத்தும்.

**10. கூட்டு மற்றும் தனி பொறுப்பு என்றால் என்ன?**

கடனீந்தோர் தங்களுக்கு சேர வேண்டிய மொத்த கடன் தொகையையும் அனைத்து கூட்டாளிகளின் தனி சொத்துக்களிலிருந்து பெற்றுக் கொள்ளலாம். அல்லது கடனீந்தோர் தங்களுக்கு சேரவேண்டிய கடன் தொகையை ஏதேனும் ஒரு கூட்டாளியின் தனிச் சொத்துக்கள் மீது வழக்குத் தொடுத்து பெற்றுக் கொள்ளலாம்.

**11. இளவர் என்பவர் யார்? ஒரு இளவர் கூட்டணியாக இருக்க முடியுமா?**

18 வயதை பூர்த்தி செய்யாத நபரை இளவர் என்கிறோம். ஆனால் நீதிமன்றத்தால் ஒரு காப்பாளர் நியமிக்கப்பட்டிருந்தால் 21 வயதுவரை அவர் இளவராக கருதப்படுவார்.

சட்டப்படி இளவர் ஒருவர் கூட்டாளியாக முடியாது. ஆனால் அனைத்துக் கூட்டாளிகளும் ஒப்புக் கொண்டால் கூட்டாண்மை பயன்களுக்கும் மட்டும் இளவர் கூட்டாளியாக சேர்த்துக் கொள்ளப்படுவார்.

**12. கூட்டாண்மை கலைப்பிற்கும், கூட்டாண்மை நிறுவன கலைப்பிற்குமுள்ள வேறுபாடுகள் யாவை?**

| | கூட்டாண்மை கலைப்பு | கூட்டாண்மை நிறுவன கலைப்பு |
|---|---|---|
| 1. | ஒருவர் (அ) ஒன்றுக்கு மேற்பட்ட கூட்டாளிகள் கூட்டாண்மையோடு தங்களுக்குள்ள உறவை முறித்துக் கொள்வது | அனைத்து கூட்டாளிகளும் தங்களுக்குள்ள உறவை முறித்துக் கொள்வதாகும். |
| 2. | இக்கலைப்பில் தொழில் முடிவுக்கு வரலாம் (அ) தொடர்ந்து நடத்தலாம். | தொழில் கட்டாயமாக முடிவுக்கு கொண்டு வந்துவிடும். |
| 3. | கலைப்பினால் நிறுவன கலைப்பு ஏற்படுவதில்லை. | கலைப்பினால் கட்டாயமாக கூட்டாண்மை கலைப்பு ஏற்படும். |

## பாடம் 4

**13. தனிவரையறை நிறுமம் – வரைவிலக்கணம் தருக?**

குறைந்தது இரு நபர்கள், அதிகபட்சம் 50 உறுப்பினர்களுக்கு மிகாமல் ரூபாய் 1 லட்சத்திற்கு குறைவில்லா மூலதனத்துடன் தொடங்கப்பட்டு, பொதுமக்களிடம் பங்குகளை வாங்கச் சொல்லி தகவலறிக்கை வெளியிடுவது தடை செய்யப்பட்டு, பங்கு மாற்றத்திற்கு தடை விதிக்கப்பட்டு, நிறுமத்தின் பெயருக்கு பின்தனிவரையறு நிறுமம் என முடிவு பெறும் நிறுமம் தனி நிறுமம் ஆகும்.

**14. கடனீட்டு பத்திரம் வரைவிலக்கணம் தருக.**

ஒரு கடனை ஒப்புக் கொள்ளும் (அ) கடனை ஏற்படுத்தும் ஒரு ஆவணமே கடனீட்டுப் பத்திரம் எனப்படும். நிறுமம் நீண்ட காலக்கடன்களை கடனீட்டு பத்திரங்கள் மூலம் திரட்டுகின்றது.

**15. நிறுமத்தின் பொது இலச்சினை குறிப்பெழுது?**

நிறுமம் சட்டம் உருவாக்கிய தனித்தன்மை பெற்ற சட்ட நபர். அதற்கு உயிரும் இல்லை. உடலுமில்லை. எனவே, பத்திரங்களில் ஒப்பந்தங்களில் கையொப்பம் இட முடியாது. ஆயினும் அதற்கென ஒரு முத்திரை நிறுமம் சார்பாக கையெழுத்திருவதுடன் பத்திரத்தில் முத்திரையை பதிந்துவிடின் நிறுமமே கையெழுத்திட்டதாகக் கருதப்படும்.

**16. அயல்நாட்டு நிறுமம் என்பதன் பொருள் யாது?**

இந்தியாவுக்கு அப்பால், பதிவு செய்யப்பட்டு, ஆனால் இந்தியாவில் தொழிலிடம் உள்ள நிறுமம் அயல்நாட்டு நிறுமம் எனப்படும்.

(நிறுமம் பற்றிய விவரங்களை இந்தியாவில் பெறுவதற்கு அதிகாரம்பெற்ற அதிகாரிகளின் விவரம் உரிய அதிகாரியிடம் வழங்க வேண்டும்)

**17. மீள்தரு கடனீட்டுப்பத்திரம் என்றால் என்ன?**

குறிப்பிட்ட கால கெடுவுக்குப் பின் அல்லது நிறுமம் விரும்பிய போது கடனீட்டுப் பத்திரங்களை நிறுமம் மீட்டுக் கொள்ளக்கூடியதாக இருப்பின் அவை மீள்தகு கடனீட்டுப் பத்திரங்கள் எனப்படும்.

## பாடம் 5

**18. சட்டமுறைக் கூட்டம் என்றால் என்ன?**

பங்குகளால் வரையறுக்கப்பட்ட (அ) பொறுப்புறுதியில் வரையறுக்கப்பட்ட ஒவ்வொரு வரையறு நிறுமமும் தொழில் தொடங்க உரிமை பெற்ற ஆறு மாதங்களுக்குள் ஒரு மாதத்திற்குப் பின்னர் கட்டாயமாக சட்டப்பட்டி கூட்டப்பட வேண்டிய கூட்டம் சட்டமுறைக்கூட்டம் எனப்படும்.

**19. பகராள் என்பவர் யார்?**

பங்குநர் ஒருவர்க்குப் பதிலாக கூட்டத்தில் கலந்து கொள்ள பங்குனரால் நியமிக்கப்படும் நபர் பகராள் எனப்படுவார்.

**20. நிகழ்ச்சி நிரல் என்றால் என்ன?**

கூட்டத்தில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளின் வரிசையே நிகழ்ச்சிநிரல் எனப்படும். கூட்டத் தலைவருடன் கலந்துரையாடி நிறுமச் செயலர் நிகழ்ச்சி நிரலைத் தயார் செய்கிறார்.

**21.நிகழ்ச்சிக் குறிப்பேடு என்றால் என்ன?**

நிறுமமொன்றின் பல்வகையான கூட்டங்கள் ஒவ்வொன்றிலும் எடுக்கப்பெற்ற முடிவுகளின் (தீர்மானங்களின்) உண்மையான, சரியான பதிவுகள்தான் நிகழ்ச்சிக்குக் குறிப்பு எனப்படுகிறது. (பொது மற்றும் இயக்குனரவைக் கூட்டங்களின் அனைத்து நடைமுறைகளின் சுருக்கமே)

**22.சிறப்பு அறிவிக்கை வேண்டும் தீர்மானம் என்றால் என்ன?**

1. பதவி விலகும் தணிக்கையாளருக்கு மாறாக வேறொரு தணிக்கையாளரை நியமித்தல்.
2. பதவி விலகும்தணிக்கையாளர் மீண்டும் நியமிக்கப்படகூடாதெனத் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றுதல்.
3. பதவிக்காலம் முடிவடையும் முன்னராகவே இயக்குனர் ஒருவரை நீக்குதல்.
4. நீக்கப்பட்ட இயக்குனர் பதவியில் வேறொரு இயக்குனரை நியமித்தல்.

**23.சட்டமுறை அறிக்கை என்றால் என்ன?**

பங்குகளால் வரையறுக்கப்பட்ட ஒரு பொது நிறுமம் தொழில் தொடங்க உரிமை பெற்ற ஆறு மாதத்திற்குள் சட்ட முறை கூட்டம் கூட்டப்பட வேண்டும்.

இந்த கூட்டம் நடைபெறுவதற்கு 21 நாட்களுக்கு முன்னர் அனைத்து பங்குகளுக்கும் அனுப்பி வைக்கப்படும் அறிக்கை. நிறுமத்தின் பங்கு முதல் வெளியீடு, வாங்கிய சொத்துக்கள் போன்ற விவரங்களை பங்குனர்க்கு தெரியப்படுத்தும் அறிக்கை.

**24. மாற்று இயக்குநர் என்பவர் யார்?**

இயக்குனரவை சாதாரணமாகக் கூடும் மாநிலத்திலிருந்து மூன்று மாதங்களுக்கு குறையாமல் இயக்குனர் ஒருவர் வெளிச்சென்று இருப்பதால், இயக்குநரவை கூட்டத்தில் கலந்து கொள்ள முடியாத நிலையில், இயக்குனரவையால் நியமிக்கப்படுபவர் மாற்று இயக்குனராவார்.

**25. மேலாளர் என்பவர் யார்?**

இயக்குனரவையின் மேற்பார்வைக்கும் கட்டுப்பாட்டுக்கும், வழிகாட்டுதலுக்கும் உட்பட்டு நிறுமச் செயல்பாடுகள் முழுவதையுமோ, பெரும் பகுதியையோ, மேலாண்மை செய்யும் பொறுப்பும் ஒப்படைக்கப்பட்டுள்ள, தனிநபர் மேலாளர் ஆவார்.

**26. ஒப்புறுதியளித்தல் என்றால் என்ன?**

பேரளவு விடுப்புகள் ஒப்புறுதியளித்தல் முறையில் வெளியிடப்படுகின்றன. இம்முறையில் ஒப்புறுதியர்கள் பொதுமக்களுக்கு வெளியிடப்பட்ட பங்குகள் முழுவதுமாக எடுத்துக் கொள்ளப்படும் என வாக்குறுதியளிக்கின்றனர். அவ்வாறு பொதுமக்களால் எடுத்துக் கொள்ளப்படாத பங்குகள் முழுவதையும் தாங்களே எடுத்துக் கொள்கின்றனர்.

**27. பட்டியலிடுதல் என்றால் என்ன?**

பங்கு மாற்றங்களின் அலுவல் பட்டியலில் பத்திரங்களைச் சேர்ப்பதே 'பட்டியலிடுதல்' எனப்படும். முன்னாளில் பட்டியிலிடுதல் விருப்பச் செயலாக இருந்தது. இன்றைய நாளில் பட்டியலிடுதல் என்பது அனைத்து பொது நிறுமங்களுக்கும் கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

**28. ஊக வணிகர் என்பவர் யார்?**

எதிர்காலத்தில் இலாபத்துடன் விற்கும் நோக்குடன் பத்திரங்களைத் தற்போது வாங்குபவர்களை ஊக வணிகர்கள் என்று அழைக்கிறோம். இவர்கள் தாங்கள் வாங்கிய பத்திரங்களை நீண்ட நாட்கள் வரை வைத்திருக்க மாட்டார்கள்.

**29. பரஸ்பர நிதிகள் இலக்கணம் தருக?**

இந்திய பத்திர மற்றும் மாற்றகங்கள் வாரியம் (பரஸ்பர நிதிகள்) ஒழுங்குபடுத்துதல் 1993 விதிகளின் படி, 'பரஸ்பரநிதி' என்பது அறக்கட்டளை அல்லது கூட்டுக்குழு அமைப்பில் ஏற்படுத்தப்பட்டுள்ள ஒரு நிதி. இதன் அறங்காப்பாளர்கள் ஒன்றுக்கும் மேற்பட்ட திட்டங்களின் கீழ் சிறு அலகுகள் மூலமாக பொதுமக்களிடமிருந்து பணத்தை மூலதனமாகப் பெற்று நிறுமம் மற்றும் பல்வேறு வாணிப நிறுவனங்களின் தங்கள் அமைப்பின் சட்டத்திற்குட்பட்டு முதலீடு செய்யும்.

**30. போல்ட்டின் சாதனைகள் யாவை?**

1. சராசரி பதிலளிப்பு நேரம் இரண்டு வினாடிகளுக்கும் குறைவானது.
2. ஒவ்வொரு நாளும் சராசரியாக 3.4 மில்லியன் சந்தைக் கேள்விகளைச் செயல்படுத்துகிறது.
3. இந்த போல்ட் தொகுதி 10,000க்கும் அதிகமான உபயோகிப்பாளருக்கு இணைப்பு கொடுக்க இயலும்.

**31.பத்திரங்கள் குறிப்பு வரைக.**

ஒரு பத்திரம் என்பது ஒருவரின் உடைமை உரிமை (பங்கு) அல்லது கடனீட்டு உரிமையைக் (கடன் பத்திரம்) குறிக்கும் ஒரு சான்றிதழ் அல்லது ஆவணம்.

**பத்திரங்கள்**

1. கூட்டுப்பங்கு நிறுமங்களில் பங்குகள், பங்குத் தொகுப்புகள், பிணையங்கள், கடன் பத்திரம், நிறுமக்கடன் பத்திரங்கள்.
2. அரசுப் பத்திரங்கள் என்பனவற்றை உள்ளடக்கியது.

**32.பொது வெளியீடு (பொது விடுப்பு) என்றால் என்ன?**

பொது நிறுமங்கள், அறிக்கை அல்லது விளம்பரங்கள் மூலமாக தகவலறிக்கை எனப்படும் சட்ட ஆவணத்தை வெளியிட்டு அதன்படி பங்குகளை வெளிப்படையாக பொதுமக்களுக்கு விற்பனை செய்யும் முறை பொது விடுப்பு எனப்படும்.

(நேரடியாக பொது மக்களுக்கு பங்குகளை குறிப்பிட்ட தொகைக்கு விற்பனை செய்வது)

## பாடம் 7

**33.கூட்டுறவு – வரையறு?**

எச்.சி. கால்வேர்ட் அவர்களின் கூற்றுப்படி கூட்டுறவு சங்கம் என்பது, உறுப்பினர்களின் பொருளாதாரத்தினை பெருக்கிக் கொள்வதற்காக மனிதர் என்ற முறையில் சமத்துவ அடிப்படையில் மக்கள் அவர்களாகவே ஒன்றுபடும் அமைப்பே கூட்டுறவு – என்று வரைவிலக்கணம் தந்துள்ளனர்.

(அல்லது ஏதேனும் ஒரு வரைவிலக்கணம்)

**34. நாணய சங்கங்களின் நோக்கம் யாது?**

ஏழை எளிய மக்களால் தன்னிச்சையாக இணைந்து உருவாக்கப்பட்ட அமைப்பாகும். இது உறுப்பினர்களுக்கு குறுகிய கால நிதிஉதவி அளிக்கும் நோக்குடன் அமைக்கப்ட்டது. இந்த வழிகளில் உறுப்பினர்கள் கடும் வட்டிக்குப் பணம் தரும் கடனிழந்தோரிடமிருந்து உறுப்பினர்களைக் காக்கிறது.

**35. வேளாண்மை கடன் சங்கம் என்பது யாது?**

ஒரு கிராமத்திலுள்ள விவசாயிகளால் பொதுவாக அமைக்கப்படும் கடன் சங்கமாகும். விவசாயம் சார்ந்த உற்பத்தி மற்றும் உற்பத்தி சாரா நோக்கங்களுக்காக உறுப்பினர்களுக்கு கடன் வசதியளிக்கிறது. இச்சங்கங்கள் ஊரக நாணயச் சங்கங்கள் (அ) பிரதம நாணயச் சங்கங்கள் என்று அழைக்கப்படுகின்றன.

**36. தமிழ்நாட்டிலுள்ள கூட்டுறவு சிறப்பங்காடிகளுக்கு எடுத்துக்காட்டுகள் தருக?**

1. சென்னையிலுள்ள காமதேனு சிறப்பங்காடி.
2. கோவை மற்றும் திருச்சியிலுள்ள சிந்தாமணி
3. வேலூரிலுள்ள கற்பகம் கூட்டுறவு சிறப்பங்காடி
4. சேலத்திலுள்ள பொன்னி கூட்டுறவு சிறப்பங்காடி

**37. ஆதரவு பங்காதயம் என்பது யாது?**

கூட்டுறவு சங்கத்தில் உறுப்பினர்கள் சங்கத்தை எந்த அளவுக்கு பயன்படுத்திக் கொள்கிறார்களோ அந்த அடிப்படையில் வழங்கப்படும் மேலூதியம் ஆதரவு பங்காதயம் எனப்படும். இதற்கு பகிர்வு நிதி என்றுபெயர்.

## பாடம் 8

**38. நாட்டுடைமையாக்கம் என்றால் என்ன?**

ஏற்கனவே தனியார் துறையில் இயங்கி வரும் அதாவது தனியாருக்குச் சொந்தமான தொழில் மற்றும் வாணிக அமைப்புகளை நாட்டுடைமையாக்கி அரசு தொழில்களாக செயல்பட செய்தல்

**39. அரசு நிறுமம் வரைவிலக்கணம் தருக.**

1956ஆம் ஆண்டு இந்திய நிறுமச் சட்டத்தின்படி, மைய அரசு, மாநில அரசுகள் தனித்தனியாகவோ, கூட்டாகவோ ஒருநிறுமத்தின் பங்கு முதலில் குறைந்தபட்சம் 51 விழுக்காட்டைக் கொண்டிருந்தால் அது அரசு நிறுமமாகும்.

**40. அரசுத் தொழிலின் வரைவிலக்கணம் தருக.**

“உற்பத்தி, விவசாயம், நிதி, வணிகம் ஆகிய தொழில்களில் ஈடுபட்டிருக்கும் அரசுக்குச் சொந்தமான, தொழில்களை அரசுத் தொழில்கள் எனலாம்” என்கின்றனர் **A.H.** ஹேன்சன் (அல்லது ஏதேனுமொரு வரைவிலக்கணம்)

**41.வரையறு – பொறுப்பு என்றால் என்ன?**

* கூட்டுப்பங்கு நிறுமத்தின் உறுப்பினர்கள் பொறுப்பு வரையறுக்கப்பட்டது.
* உறுப்பினர் ஒருவர் தான் வைத்து இருக்கும் பங்குகள் மீது செலுத்தப் பெறாத தொகை அளவே அவர் பொறுப்பு ஆகும்.

**42. தகவலறிக்கை வரைவிலக்கணம் எழுதுக.**

ஒரு பொது வரையறு நிறுமம், தனது பங்குகளையோ அல்லது கடனீட்டு பத்திரங்களையோ பொதுமக்கள் வாங்குமாறு அழைப்பு விடுக்கும் ஆவணத்திற்கு தகவலறிக்கை என்று பெயர்.

**43. நிறுமம் வரைவிலக்கணம் தருக.**

ஹேனே கூற்றுப்படி, “நிறுமம் என்பது உருவாக்கப்பட்ட ஒரு அமைப்பு, சட்டத்தால் உருவாக்கப்பட்ட ஒரு செயற்கை நபர் தனிநபர், தனிநபர் தன்மையுடையது, வழிவழியாக தொடரக்கூடியது, நீண்ட ஆயுள்காலம் உடைய பொது முத்திரை கொண்டு செயல்படுவது”

**44. குறைந்தளவு பங்கொப்பம் என்றால் என்ன ?**

தகவலறிக்கையில் குறிப்பிட்டுள்ள குறைந்தளவு பங்கெடுப்பு தொகையை ரொக்கமாக பெறாவிடில், இயக்குநரவை பங்குகள் ஒதுக்கீடு செய்யக்கூடாது.

குறைந்தளவு பங்கொப்பம் 90 % ஆகும்.

**45. பங்குகள் முனைமத்தில் வெளியிடல் என்றால் என்ன?**

* ஒரு நிறுமம் பங்குகளை முனைமத்தில் வெளியிடலாம்.
* பங்கின் வெளியீட்டு விலை, முகமதிப்பை விட அதிகமாக இருந்தால் அதற்கு முனைமம் என்று பெயர்.

எ.கா. முகமதிப்பு ரூ. 10, வெளியிட்டது ரூ.12 பங்கு முனைமம் ரூ. 2 ஆகும்.

**46. குறைவெண் என்பதன் பொருள் கூறுக.**

ஏதேனும் ஒரு பொருள் குறித்து, செல்லத்தக்க வகையில், தீர்மானம் நிறைவேற்ற நடைபெறும் கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டிய குறைந்தளவு உறுப்பினர்கள் எண்ணிக்கையே குறைவெண் எனப்படும்.

* தனி வரையறு நிறுமம் – 2 உறுப்பினர்கள்
* பொது வரையறு நிறுமம் – 5 உறுப்பினர்கள்

கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டும்.

**47. இரண்டாம் நிலை சந்தை என்றால் என்ன ?**

* முதன்மை சந்தையில் வெளியிட்ட பத்திரங்களை மறு விற்பனை செய்யும் சந்தையாகும்.
* இரண்டாம் நிலை சந்தையின் வளர்ச்சி முதன்மை சந்தையை பொறுத்தே உள்ளது.

**48ஆயத்த கொடுப்பு ஒப்பந்தம் என்றால் என்ன?**

* இவ்வகை ஒப்பந்தங்களில் பத்திரங்களை வாங்கியவர் பணத்தையும் விற்பவர் பத்திரங்களை உண்மையாகவே பரிமாறி கொள்வார்.
* இந்த ஒப்பந்தம் தாம் குறிப்பிடும் நாளிலோ அல்லது பங்கு மாற்றகம் குறிப்பிடும் நாளிலோ தீர்க்கப்படும்.

**49. வரையறுத்த கூட்டாண்மை என்றால் என்ன?**

ஒரு கூட்டாண்மையில் கூட்டாளிகளின் பொறுப்பு வரையறுக்கப்பட்டு இருந்தால் அது வரையறுத்த கூட்டாண்மை எனப்படும்.

* இந்த கூட்டாண்மையில் ஒரு கூட்டாளியின் பொறுப்பு, வரையறா பொறுப்பு ஆகும்.
* அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவில் இக்கூட்டாண்மை காணப்படும்.

**50. கூட்டாண்மை ஒப்பாவணம் என்றால் என்ன?**

* கூட்டாண்மை உடன்படிக்கையால் ஏற்படுகிறது.
* கூட்டாண்மை உடன்பாடு எழுத்து வடிவில் இருக்க வேண்டும்.
* கூட்டாண்மை பற்றிய விவரங்கள் மற்றும் நிபந்தனைகள் அடங்கிய ஆவணத்திற்கு கூட்டாண்மை ஒப்பாவணம் என்று பெயர்.

**51.தகவலறிக்கைக்கு மாற்றறிக்கை என்றால் என்ன ?**

நிறுமத்தின் தோற்றுவிப்பாளர், நிறுமத்திற்கு வேண்டியிருக்கும் பங்கு முதல், முழுவதையும் தனிப்பட்ட ஏற்பாட்டின்படி திரட்டி கொண்டால், தகவல் அறிக்கைக்கு மாற்று அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும்.

**52. பங்கு ஒறுப்பிழப்பு என்றால் என்ன?**

* பங்குதாரர்கள் தவணை தொகையை (அழைப்பு பணம்) செலுத்த தவறிவிடுகின்றனர்.
* நிறும செயல்முறை விதிகள் அதிகாரம் அளித்தால், இயக்குநரவை தீர்மானத்தின்படி, 14 நாட்களுக்கு முன் ஒரு அறிக்கை விடுத்து பங்குகளை ஒறுப்பிழப்பு செய்ய வேண்டும்.

## பகுதி இ

**எட்டு மதிப்பெண்கள் வினாக்கள் :**

**1. பன்னாட்டு நிறுமம் விளக்கி எழுதுக.**

- ☞ இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நாடுகளில் வியாபாரத்தை நடத்துவது
- ☞ பல நாடுகளில் இயங்கி வருவது
- ☞ தொழிற்சாலைக்கும், அலுவலகங்களும், ஒரு நாட்டிற்கு மேல் இருக்கும்.
- ☞ அயல்நாடுகளில் உள்ள கச்சாப் பொருள்கள், பணியாட்கள், சந்தை ஆகியவற்றை பயன்படுத்தி கொண்டு, போக்குவரத்து செலவுகளை குறைக்க முற்படுகிறது.

**சிறப்பியல்புகள் :**

1. ஒரு பன்னாட்டு நிறுமம் ஒரே சமயத்தில் பல நாடுகளில் நடத்தப்படும்.
2. இது மிகப்பெரிய அளவில் செயல்படும்.

இன்று உலக அளவில் **500** முதல் **700** பன்னாட்டு நிறுமங்கள் செயல்படுகின்றன.

அமெரிக்காவில் **60%** ஆசிய நாடுகளில் **30%** ஆப்பிரிக்காவில் **10%** நிறுமங்கள் செயல்படுகின்றன.

எ.கா.

1. யூனி லிவர் லிமிடெட் 2. யூனியன் கார்பைடு 3. இன்டர்நேஷனல் பிசினஸ் மெசின்
4. பிலிப்ஸ் 5. கோகோ கோலா கழகம்

**2. அமைப்பை பற்றி நாம் ஏன் தெரிந்து கொள்ள வேண்டும்?**

ஓர் அமைப்பு என்பது மனித வாழ்வில் அனைத்து முக்கிய தருணங்களில் பரவியுள்ளது.

மனிதன் பிறப்பு மருத்துவமனைகளில் நிகழ்கிறது, அவனுடைய கல்வி பள்ளி, கல்லூரி மற்றும் பல்கலை கழகங்களில் கிடைக்கிறது.

ஒரு மேலாளருக்கு அமைப்பை பற்றிய அறிவு தனது பணியை திறம்பட செயல்படுத்த உதவுகிறது.

ஒரு அமைப்பை திருப்தி அளிக்கும் வகையில் இருக்க வேண்டும்.

அமைப்பு திருப்தி அளிக்காவிட்டால் அது ஏமாற்றத்தை அளிக்கும்.

**3. சமுதாயத்தில் தனி வணிகரின் பங்கினை எழுதுக.**

**1. வேலை இல்லா பிரச்சனைக்கு தீர்வு**

குறைந்த கல்வி அறிவு உடையர்வளுக்கும், கல்வி அறிவு இல்லாதவர்களுக்கும் வேலை வாய்ப்பு அளிக்கிறது.

வேலை இல்லா திண்டாட்டத்தை போக்குகிறது.

**2. முதலீட்டிற்கான வாய்ப்பு :**

சிறு முதலீட்டாளர்களின் குறைந்த முதலுடன் தொழில் தொடங்க வாய்ப்பு உள்ளது.

முதலீட்டாளர்களின் சேமிப்புகளை உற்பத்திக்கு பயன்படுகிறது.

**3. குறைந்த செலவில் பொருள்களை அளித்தல் :**

நிர்வாக செலவு குறைவாக உள்ளதால் பொருள்களை குறைவான விலைக்கு விற்க முடிகிறது.

**4. சிறு உற்பத்தியாளருக்கு உதவுவதல் :**

உள்ளூர் பொருள் உற்பத்தியாளர்களிடமிருந்து அதிக பொருள்கள் கொள்முதல் செய்யப்படுகின்றன.

உள்ளூர் உற்பத்தியாளர் பயன் அடைகின்றனர்.

**5. தரமான பொருள்களை அளித்தல் :**

தனது மதிப்பை காப்பாற்றிக் கொள்ள, தனி வணிகர் தரமான பொருள்களை விற்பனை செய்கிறார்.

விற்ற பொருளில் குறை இருந்தால் அதை திரும்ப பெற்று கொள்கிறார்.

**6. தர்ம சிந்தனை நடவடிக்கைகள் :**

கண் பரிசோதனை செய்தல், பள்ளிகளுக்கு அறைகலன் வாங்குதல், பாதையில் தடுப்புகளை

ஏற்படுத்துதல், இரத்ததான முகாம் போன்ற சமுதாய சேவைகளை தனி வணிகர் செய்கிறார்.

**7. நுகர்வோருக்கு உதவுதல் :**

வீட்டு வாசலில் பொருள்களை கிடைக்க செய்கிறார்.

இதனால் நேரமும், உழைப்பும் மிஞ்சுகின்றன.

**4. மீள்தகு முன்னுரிமை பங்குகளை பற்றி விளக்குக.**

- ☞ நிறும செயல்முறை விதிகள் அதிகாரம் வழங்கி இருக்க வேண்டும்.
- ☞ குறிப்பிட்ட காலத்திற்கு பின்னர் பங்குகளை மீட்க வேண்டும்.
- ☞ பங்குகள் முழுவதும் செலுத்த பெற்றதாக இருக்க வேண்டும்.
- ☞ முன்னுரிமை பங்குகளை மீள்தகு பங்குகளாக மாற்ற முடியாது.
- ☞ புதிய பங்குகளை வெளியிட்ட பணம் மூலம் மீட்டல்.

**5. பங்குகளை வட்டத்தில் வெளியிட நிபந்தனைகள் யாவை?**

- ☞ பங்குகள் முன்னரே வெளியிட்ட வகையை சார்ந்ததாக இருக்க வேண்டும்.
- ☞ சாதாரண தீர்மானம் நிறைவேற்றி இருக்க வேண்டும்.
- ☞ மைய அரசு ஒப்புதல் தர வேண்டும்.
- ☞ உயர்ந்த அளவு 10 சதவிகிதம் தள்ளுபடி வழங்கலாம்.
- ☞ நிறுமம் தொடங்கி ஓராண்டு ஆகி இருக்க வேண்டும்.
- ☞ இரண்டு மாதங்களுக்குள் பங்குகளை வட்டத்தில் வெளியிடல் வேண்டும்.

**6. ஒரு கூட்டம் செல்லத்தக்கதாக இருப்பின் நிபந்தனைகள் யாவை?**

- ☞ கூட்டம் உரிய முறையில் கூட்டப்பட வேண்டும்.
- ☞ சட்ட விதிகளுக்கு உட்பட்டு கூட்டம் அமைய வேண்டும்.
- ☞ செயல்முறை விதிகளின்படி கூட்டம் நடைபெற வேண்டும்.
- ☞ முறை பிறழாது கூட்டம் நடைபெற வேண்டும்.
- ☞ நிகழ்ச்சி நிரலில் குறிப்பிட்ட நடவடிக்கைகளை மட்டும் மேற்கொள்ள வேண்டும்.
  சட்ட விதிகளின்படி கூட்டம் நடைபெற வேண்டும்.

**7. கூட்டாளிகளின் பொறுப்புகளை விளக்குக.**

- ☞ நிறுவனத்தின் கடன்களுக்கு கூட்டாளிகள், கூட்டாகவும், தனித்தனியாகவும் பொறுப்பு ஏற்க வேண்டும்.
- ☞ ஒரு கூட்டாளி விலகுவதற்கு முன்னர் ஏற்பட்ட கடன்களுக்கு பொறுப்பு ஏற்க வேண்டும்.
- ☞ உள்வரும் கூட்டாளி கூட்டாண்மையில் சேர்ந்த நாள் முதல் கடன்களுக்கு பொறுப்பு ஏற்க வேண்டும்.
- ☞ கூட்டாளி ஒருவர் இறந்து விட்டால், இறப்பதற்கு முன் ஏற்பட்ட கடன்களுக்கு அவரது பிரதிநிதிகள் பொறுப்பு ஏற்க வேண்டும்.
- ☞ கூட்டாளி ஒருவர் இளவராக இருந்தால் அவரது லாப பங்கும், சொத்துக்களில் அவரது பங்கும் நிறுவன கடன்களுக்கு பொறுப்பு ஆகும்.

**8. இயக்குநர் ஒருவர் தகுதியின்மையை விளக்கு?**

- ☞ சம மனநிலை இழந்தவர்
- ☞ விடுவிக்கப் பெறா நொடிப்பு நிலை (திவால்) அடைந்தவர்.
- ☞ நொடிப்பு நிலை அடைந்தவராகக் கருதுமாறு விண்ணப்பம் செய்துள்ள நபர்.
- ☞ தகாத நடத்தைப் பற்றிய குற்றத்திற்காக சிறைதண்டனை பெற்ற நபர்.
  மேலாண்மையில் மோசடி செய்த காரணத்தால் இயக்குநராக நியமிக்கப்பெறும் தகுதியை நீதிமன்றத்தால் இழக்க நேரிட்ட நபர்.
- ☞ அழைப்பு பணத்தை ஆறு மாதங்களுக்கு நிலுவை வைத்திருப்பவர்.

**9. கூட்டங்களின் பல்வேறு வகைகளை எழுதுக.**

1) பங்குதாரர்கள் கூட்டம்

(அ) சட்டமுறை கூட்டம்

பங்குதாரர்களின் முதல் கூட்டம் சட்டப்படி கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இதுவே சட்டமுறை கூட்டம் எனப்படும்.

ஆ. ஆண்டு பொதுக் கூட்டம்

ஒவ்வொரு நிறுமமும் ஆண்டு பொதுக்கூட்டத்தை கூட்ட வேண்டும்.

18 மாதங்களுக்குள் முதல் கூட்டம் கூட்டப்பட வேண்டும்.

அதன் பின்னர் 15 மாத இடைவெளிக்குள் கூட்டம் கூட்டப்பட வேண்டும்.

இ) சிறப்பு பொதுக்கூட்டம்

சட்ட முறை சட்டம், ஆண்டு பொதுக் கூட்டம் தவிர மற்ற கூட்டங்களை சிறப்பு பொதுக் கூட்டம் என்கிறோம்.

2) இயக்குநர்கள் கூட்டம்

அ) இயக்குநர் அவைக் கூட்டம்

இயக்குநர்கள் கூட்டங்களை இயக்குநர் அவைக் கூட்டங்கள் என்று அழைக்கப்படுகிறது.

ஆ) இயக்குநர் குழுக் கூட்டம்

பல பொருள்களை தீர விசாரித்து முடிவெடுக்க இயக்குநர் குழு அமைக்கப்படுகிறது.

3) கடனீட்டு பத்திரதாரர் கூட்டம்

நிறுமம் எப்பொழுது விரும்புகிறதோ அப்பொழுது இந்தக் கூட்டத்தை கூட்டலாம்.

4) கடனாளர் கூட்டம்

கடனை செலுத்த திட்டம் ஒன்று செய்துக் கொள்ள இந்த கூட்டம் கூட்டப்படுகிறது.

**10.இயக்குநரின் குற்றவியல் பொறுப்புகளை எழுதுக.**

அ. தகவல் அறிக்கையில் பொய்யான தகவல் கொடுத்ததற்கு

ஆ. பங்கு ஒதுக்கீட்டு அறிக்கை தாக்கல் செய்யத் தவறும் பொழுது.

இ. குறிப்பிட்ட காலத்திற்குள் பங்குச் சான்றிதழ் வழங்கத் தவறியதற்கு.

ஈ. பங்காதாயம் 42 நாட்களுக்குள் வழங்கத் தவறினால்

உ. ஆண்டு பொதுக் கூட்டத்தில் லாபநட்ட அறிக்கை, இருப்புநிலை குறிப்பு தாக்கல் செய்யத் தவறும் பொழுது.

ஊ. நிறும தணிக்கையாளரிடம் போதிய தகவல்கள் கொடுக்கத் தவறினால்

எ. முக்கிய ஆவணங்கள் அழித்தமைக்கு.

ஏ. பொது வரையறு நிறுவத்தில் 15 நிறுமங்களுக்கு மேல் இயக்குநர் பதவி வகித்தால்

குற்றவியல் பொறுப்புக்கு உள்ளாக வேண்டும்.

**11. பரஸ்பர நிதிகளின் நன்மைகளை எழுதுக.**

அ. சிறு முதலீட்டாளர்களின் சேமிப்பை ஒன்று திரட்டி, நிறுமங்களில் முதலீடு செய்கிறது.

ஆ. சிறிய மற்றும் மத்தியத்தர முதலீட்டாளர்கள் பங்கு கொள்ளும் வகையில் பயன் அளிக்கிறது.

இ. தமது வாடிக்கையாளர்களுக்கு நல் ஆக்க விளைவை அளிக்கிறது.

ஈ. தமது வாடிக்கையாளர்களுக்கு குறைந்த செலவில் திறமையான முதலீட்டு சேவை செய்கிறது.

உ. குறிப்பிட்ட நிதிகள், தங்களுடைய வாடிக்கையாளர்களுக்கு தனிப்பட்ட வரிச் சலுகை அளிக்கிறது.

ஊ. எளிதாக மாற்றிக் கொள்ளக்கூடிய முதலீட்டு திட்டங்களை அளிக்கின்றன.

எ. சிறிய முதலீட்டாளர்களுக்கு நீர்மைத்தன்மை வசதி அளிக்கிறது.

ஏ. மூலதன சந்தை வளர்ச்சி பெற உதவுகிறது.

ஐ. நிலையான முதல் வழங்குவதன் மூலம் தொழிற் துறை முன்னேற வழி வகுக்கின்றது.

**12.பங்கு மாற்றகத்தில் செயல்படுவோர் அல்லது பங்கு மாற்றகத்தின் உறுப்பினர்களை எழுதுக.**

**1. தன் வணிகர்கள்**

அ. பங்குத் தொகுதிகள், கடன் பத்திரங்கள், வாங்கிவிற்கும் தனிப்பட்ட வியாபாரிகள் ஆவார்.

ஆ. வாங்கிய விலைக்கும், விற்ற விலைக்கும் இடையே உள்ள வேறுபாடு இவர்களுக்கு கிடைக்கும் லாபம்

ஆகும்.

இ. இவர்கள் எந்த கழிவும் பெற இயலாது.

ஈ. இவர்கள் தாராவணி வாலா என்று அழைக்கப்படுகின்றனர்.

**2. தரகர்கள்**

அ. இவர்கள் கழிவு முகவர் ஆவார்.

ஆ. பத்திரங்களை வாங்குபவர்களுக்கும், விற்பவர்களுக்கும் இடைநிலையராக செயல்படுகின்றனர்.

இ. வாங்குபவர்களையும், விற்பவர்களையும் ஒன்றிணைத்து பேரம் முடிவடைய உதவுபவர்.

ஈ. பத்திரங்களின் விலை போக்கினை மதிப்பிடுவதில் வல்லுநர்.

**3. துணைத் தரகர்**

☞ பங்கு மாற்றகத்தின் உறுப்பினர் ஒருவருக்கு முகவராக செயல்படுவார்.

☞ தன்னை அமர்த்திய முதல்வருக்கு, வியாபாரத்தை பெற்றுத் தந்து அதற்கு கழிவு பெறுவார்.

**4. அதிகாரமளிக்கப்பட்ட எழுத்தர்**

☞ தங்களது முதல்வரின் சார்பாக பங்கு மாற்றக தளத்தில் தொழில் செய்வதற்கு உரிமை அளிக்கப்பட்டுள்ளார்.

☞ பங்கு மாற்றகத்தில் உறுப்பினராக இருப்பவரால், பணியாளராக அமர்த்தப்பட்டவர்.
இவர்கள் சம்பளமும், கழிவும் பெறுவர்.

**13.போல்ட்டின் ஆற்றல்களை விளக்குக?**

அ. மனித செயல்பாட்டு தொகுதிகளில் இயற்கையாகவே அமைந்துள்ள செயல்திறமையின்மையை போக்குகிறது.

ஆ. பங்கு மாற்றகங்களின் வாணிக கொள்திறனை அதிகரிக்கிறது.

இ. பொருந்திவராத வணிகத்தை தவிர்க்கிறது.

ஈ. அறிவிப்புகள், நடவடிக்கைகள் நிலையை தாமதப்படுத்துவது இல்லை.

உ. அண்மை தொழில் நுட்பத்தில் பயன்படுத்தி தடங்கலற்ற முறையில் சந்தை நடவடிக்கைகள் நடைபெற செய்கிறது.

ஊ. மின்னியல் வாயிலாக தரகர்களிடம் நேரடி இணைப்பை ஏற்படுத்தி வாணிக நடவடிக்கைகள் நடைபெற உதவுகிறது.

எ. பங்குகளின் விலைகள், குறியீடுகள் போன்ற தகவல்களை உபயோகிப்பாளருக்கு அளிக்கிறது.

ஏ. பங்கு மாற்றகங்களுக்கு நன்கு ஆராயப்பட்ட தகவல்களை அளிக்கிறது.

ஐ. பங்கு மாற்றகங்களின் செயல்பாடுகளைக் கொண்டு வருவதற்காக பல வகையான வரம்புகளை விதித்திருக்கிறது.

**14.பங்குகள் ஒதுக்கீட்டின் போது கவனத்தில் கொள்ள வேண்டியவைகள் யாவை?**

அ. தகவலறிக்கையை வெளியிடுவதற்கு முன், அதன் நகல் ஒன்றை நிறும பதிவாளரிடம் தாக்கல் செய்ய வேண்டும்.

ஆ. குறும பங்கெடுப்புத் தொகை பெற்று இருந்தால் ஒழிய ஒதுக்கீடு செய்யக் கூடாது.

இ. தகவலறிக்கை வெளியிட்ட 90 நாட்களுக்குள் குறைந்த அளவு பங்கெடுப்பு பெற வேண்டும்.

ஈ. அட்டவணை வங்கியில் விண்ணப்ப பணத்தை போட்டு வைக்க வேண்டும்.

உ. 90 நாட்களுக்குள் குறைந்த அளவு பங்கெடுப்பு பெறவில்லை எனில், பணம் திருப்பி தருதல் வேண்டும்.

ஊ. தகவலறிக்கை வெளியிட்ட 5ஆவது நாள்களுக்கு முன்னர் பங்குகள் ஒதுக்கீடு செய்யக் கூடாது.

**15.இயக்குநர் ஒருவர் தன் பதவியை எவ்வாறு இழக்கிறார் அல்லது துறக்கிறார்?**

1. நீதிமன்றம் சம மனநிலை இழந்தவர் என கண்டறிந்தால்.
2. நொடிப்பு நிலை அடைந்தவர் என நீதிமன்றம் தீர்ப்பு வழங்கி இருந்தால்
3. குறிப்பிட்ட கால கெடுவிற்குள் தகுதி பங்குகள் பெற தவறிவிட்டால்.

4. 6 மாதம் சிறை தண்டனை வழங்கப்பட்டு இருந்தால்.
5. அழைப்பு பணம் ஆறு மாதத்திற்குள் செலுத்தாமல் இருந்தால்.
6. இயக்குநர் அவைக் கூட்டங்களில் மூன்றுமுறை, அல்லது மூன்று மாதம் நடைபெறும் கூட்டத்திலோ கலந்து கொள்ளாமல் இருந்தால்.
7. நீதிமன்ற ஆணையின் பேரில் அவர் தகுதி இழக்க நேரிடின்.
8. நிறுமம் ஈடுபடும் எந்த ஒப்பந்தத்திலும் தான் தொடர்புற்று இருந்தால்.

**16. முறைகேடான ஒதுக்கீடு குறித்து குறிப்பு வரைக.**

அ. பங்கொன்றின் இயல் மதிப்பு அல்லது முகமதிப்பில் குறைந்தது 5 சதவீதம் அளவிற்கு விண்ணப்பப் பணம் பெறாமல் ஒதுக்கீடு செய்யக் கூடாது.

ஆ. தகவல் அறிக்கை வெளியிட்ட 90 நாட்களுக்குள் குறைந்த அளவு பங்கெடுப்பு பெறாத போது பங்குகளை ஒதுக்கீடு செய்தல் முறைகேடான ஒதுக்கீடு செய்தல் ஆகும்.

இ. பங்கு விண்ணப்ப பணத்தை அட்டவணை வங்கியில் போட்டு வைக்காமல் ஒதுக்கீடு செய்வது.

ஈ. தனி ஏற்பாட்டின் மூலம் பங்கு முதல் திரட்டியிருந்தால் தகவல் அறிக்கைக்கு பதில் மாற்று அறிக்கை பதிவாளர் இடம் தாக்கல் செய்யாமல் ஒதுக்கீடு செய்திருந்தால் அது முறைகேடான ஒதுக்கீடு ஆகும்.

**17. கூட்டுறவு அங்காடியின் சிறப்புகளை எழுதுக?**

1. பேரளவு சில்லறை விற்பனை செய்யும் அமைப்பு
2. பலவகையான பொருள்கள் கிடைக்குமிடம்.
3. சுயசேவைப் பிரிவில் விற்பாண்மையர் தேவை இல்லை.
4. இது பல துறைகளைக் கொண்டதாகும்.
5. ரொக்க விற்பனை அடிப்படையில் விற்பனை நடைபெறும்.
6. பொருட்கள் சுத்தம் செய்யப்பட்டு, பல கட்டுமங்களில் விற்கப்படுகிறது.
7. பொருட்களில் கலப்படம் இல்லை.
8. சரியான அளவைகளில் பொருள்கள் கிடைக்கிறது.
9. அரிதான பொருட்கள் கூட இங்கு விற்பனை செய்யப்படுகிறது.

**18. நிகழ்ச்சி குறிப்பேட்டில் காணப்பெற வேண்டியவை யாவை?**

அ. கூட்டத்தின் தன்மை, ஆண்டுப் பொதுக் கூட்டம் அல்லது சிறப்புப் பொதுக்கூட்டம் என்ற விவரம் கூட்ட நாள், இடம், காலம் பற்றிய விவரம்

ஆ. கூட்ட தலைவர், செயலர், இயக்குநர்கள் பெயர்கள்

இ. கூட்டத்திற்கு வந்திருந்த உறுப்பினர்களின் எண்ணிக்கை

ஈ. நிகழ்ச்சி நிரலில் குறிப்பிட்ட வரிசையில் நடைபெற்ற நிகழ்ச்சிகளின் சுருக்கம்

உ. கடந்த கூட்டத்தின் நிகழ்ச்சி குறிப்புக்கு இந்த கூட்டத்தில் ஒப்புதல்.

ஊ. கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்

எ. கூட்ட தலைவரின் கையொப்பம்

**19. அரசு நிறுமத்தின் இயல்புகள் யாவை?**

1. <u>கூட்டுருவாக்கம் :</u> அரசு நிறுமம் இந்திய நிறும சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டு தோற்றுவிக்கப்படுகிறது.
2. <u>அரசுநிதி :</u> 51 சதவீதம் பங்கு முதல் அரசு ஏற்றுக் கொள்ளும்.
3. <u>பொதுமக்கள் :</u> பங்கேற்பு தனியாரும் பங்கு
4. <u>மேலாண்மை :</u> இயக்குநரவை மேலாண்மை செய்கிறது.
5. <u>தன் ஆட்சியுரிமை :</u> நிதி, நிர்வாகத்தில் மிக அதிகமான சுதந்திரம் உள்ளது.
6. <u>பணியாளர்கள் :</u> அரசு அலுவலர்கள், மற்ற பணியாளர்களை அரசு நியமித்து கொள்ளலாம்.
7. <u>கட்டுப்பாடு :</u> துறை சார்ந்த அமைச்சரின் கட்டுப்பாட்டில் இது இயங்கும்.

8. <u>தணிக்கையாளர் :</u> தணிக்கையாளர் மைய அரசு நியமிக்கும்.

**20. கூட்டுறவு சங்கத்தை எவ்வாறு தோற்றுவிப்பாய்?**

1. கூட்டுறவு சங்க சட்டம் 1912ன்படி அல்லது மாநில கூட்டுறவு சட்டத்தின்படி ஒரு சங்கம் பதிவு செய்யப்பட வேண்டும்.
2. ஒரு ஊரைச் சேர்ந்த பொதுநலன் உள்ள எவரேனும் 25 நபர்கள் கூடி கூட்டுறவு சங்கத்தை தோற்றுவிக்கலாம்.
3. கூட்டுறவு சங்க பதிவாளரிடம் சங்கம் அமைக்க இருக்கும் விண்ணப்பத்தை பூர்த்தி செய்து விருப்பத்தை தெரிவிக்கலாம்.
4. அந்த விண்ணப்பப் படிவத்திற்கு அமைப்பு முறையேடு என்று பெயர்.
5. அதில் சங்கத்தின் பெயர், விலாசம், நோக்கம் முதல், உறுப்பினர்களின் பொறுப்பு ஆகியவை குறிப்பிட வேண்டும்.
6. விண்ணப்பத்துடன் சங்கத்தின் துணை விதிகள் கட்டுப்பாடுகள் இணைக்க வேண்டும்.
7. மேலாண்மை செய்யும் முறை, கூட்ட நடைமுறைகள், தீர்மானங்கள் துணைவிதிகளில் குறிப்பிட வேண்டும்.
8. பதிவாளர் அனைத்தையும் பரிசீலித்து தனக்கு திருப்தி ஏற்பட்டால், பதிவேடுகளில் பதிவு செய்து கூட்டுருவாக்க சான்றிதழ் கொடுப்பார்.
9. இந்தச் சான்றிதழ் பெற்றவுடன் தனி ஆளுமை தனி சட்ட உருவம் பெறுகின்றன.

## <u>பகுதி –ஈ – 20 மதிப்பெண் வினாக்கள்</u>

**2. தனி நபர் வணிகத்தின் குணாதிசயங்கள் யாவை?**

**1) தனிநபர் உரிமையும் கட்டுப்பாடும்**

ஒரு தனி நபரால் நடத்தக் கூடிய வியாபார அமைப்பு தனியாள் வணிகமாகும். அவரே இதன் உரிமையாளர். அவர் ஒருவரே தனி உரிமையாளர்களாகவும் மற்றும் வணிகத்தின் தலைவராகவும், யாருடைய குறுக்கீடும் இல்லாமல் சுதந்திரமாக வணிக நடவடிக்கையை மேற்கொள்கிறார். எனவே தனியாள் வணிக அமைப்பில் உரிமையும் கட்டுப்பாடும் தனி நபர் வசமே உள்ளது.

**2) மூலதனம்**

தனியாள் வணிகத் தொழிலமைப்பில் ஒரு நபர் மட்டுமே முதலீடு செய்கிறார். தொழிலுக்குத் தேவையான முதலை, தன் சொந்த சேமிப்பிலிருந்து செலுத்துகிறார். அவர் நண்பர்களிடமோ, உறவினர்களிடமோ, நிதி நிறுவனங்களிடமோ கடன் பெற்றும் முதலீடு செய்யலாம்.

**3) வரையறாப் பொறுப்பு**

தனியாள் வணிகத்தில் உரிமையாளரின் பொறுப்பு வரையறுக்கப்படாது. இவ்வரையறாப் பொறுப்பினால் தனி வணிகர் தன் வியாபாரக் கடன்களை செலுத்த தொழிலின் சொத்துகள் போதுமானதாக இல்லாவிடில், தன் சொந்த சொத்துக்களிலிருந்தும் கடனீந்தோரும் செலுத்த வேண்டும். கடனீந்தோர் உரிமையாளரின் பிற சொத்துக்களையும் பறிமுதல் செய்ய உரிமை பெறுகின்றனர்.

**4) இலாப நட்டம்**

வியாபாரத்திலிருந்து கிடைக்கும் முழு இலாபத்தையும் அனுபவிக்கும் உரிமை தனி நபருக்கே உரியது. இத்தனியாள் வணிகர் இலாபத்தை பிறருடன் பங்கிட்டுக் கொள்ளத் தேவையில்லை. அதுபோலவே நட்டம் ஏற்படுமாயின், அது முழு நட்டத்தையும் தனி நபரே ஏற்க வேண்டும். எனவே, இலாபமும், நட்டமும் அவரையே சாரும்.

**5) சட்டத் தனித்துவமின்மை**

தனியாள் வியாபாரத்தில் தனியாள் வணிகரும் வியாபாரமும் ஒன்றாகக் கருதப்படுகின்றன. கூட்டுப்பங்கு நிறுமத்தைப் போல் உரிமையும் நிர்வாகமும் பிரிக்கப்படவில்லை. உரிமையும் நிர்வாகமும் ஒன்றாகவே கருதப்படுகிறது. யார் உரிமையாளரோ அவரே நிர்வாகத்தையும் மேற்கொள்கிறார்.

**6) தனிச்சட்டம் இல்லை**

கூட்டாண்மையை ஒழுங்குப்படுத்த இந்திய நிறுமச் சட்டம், கூட்டுறவுச் சட்டம் இருப்பதை போல் தனி வணிகத்தை ஒழுங்குபடுத்த தனியாக சட்டம் ஏதும் இல்லை.

**7) பதிவு**

கூட்டாண்மை, நிறுமம் முதலிய அமைப்புகள் அவைகளுக்கான சட்டத்தின்படி பதிவு செய்யப்படுகின்றன. ஆனால் தனி வணிகர், தன் தொழிலைப் பதிவு செய்ய வேண்டியதில்லை. பணம் படைத்த எவரும் தனி வணிகத்தைத் தொடங்கலாம். சிலவகைத் தொழில்களை மேற்கொள்ள நகராட்சி, பேரூராட்சி மற்றும் ஊராட்சியிடமிருந்து உரிமம் பெற வேண்டியிருக்கும்.

**8) வாழ்வு**

கூட்டுப் பங்கு நிறுமங்களைப் போல் தனியாள் வணிகத்திற்கு நீடித்த வாழ்வு கிடையாது. அவருக்கு வாரிசு இல்லாமை முதலியன தனியாள் வணிகத்தை ஒரு முடிவுக்கு கொண்டு வரும்.

**9) எளிமை**

தனியாள் வணிகத்தைத் தொடங்கலும் கலைப்பதும் எளிது. தனியாள் வணிகத்தைக் கலைக்க சட்டவிதிகளைப் பின்பற்ற வேண்டியதில்லை. இதற்கு சிறிய அளவு முயற்சியே போதுமானது.

**10) உள்ளூர் வியாபாரம்**

பெரும்பான்மையான தனியாள் வணிகம் குறிப்பிட்ட தெரு வட்டாரம் அல்லது கிராம அளவிலேயே நடைபெறுகின்றன. பல்வேறு இடங்களில் நடைபெறுகின்றன.

**11) சுயவேலை வாய்ப்பு**

தனியாள் வணிகர் பெரும்பாலும் தனது சொந்த உழைப்பையே வியாபாரத்தில் பயன்படுத்துகிறார். இவர் தேவைப்பட்டால் சில பணியாளர்களைத் துணையாகக் கொண்டு வியாபார நடிவடிக்கையே மேற்கொள்கிறார்.

**12) குறைந்த முதல்**

தனியாள் வணிகத்தை துவக்க மிகவும் குறைந்த முதலே போதுமானது ஆனால், கூட்டாண்மை நிறுவனத்தையே அல்லது கூட்டுப் பங்கு நிறுமத்தையே தொடங்க அதிக அளவு முதல் தேவைப்படுகிறது.

**3. பங்குகட்கும் கடனீட்டுப் பத்திரங்கட்கும் உள்ள வேறுபாடுகளை விவரி.வ.எண்வேறுபாட்டு அட்டவணை பங்குகள் (பங்குநர்கள்)கடனீட்டுப் பட்திரங்கள்(கடனீட்டுப் பட்திரதாரர்கள்)**

| வ. எண் | வேறுபாட்டு அட்டவணை | பங்குகள் (பங்குநர்கள்) | கடனீட்டுப் பத்திரங்கள் (கடனீட்டுப் பத்திரதாரர்கள்) |
|---|---|---|---|
| 1. | பொருள் | ஒரு நிறுமத்தை பங்கு முதலின் ஒரு சிறு கூறே பங்காகும். எனவே பங்குநர் நிறுமத்தின் உரிமையாளர் நிலையில் இருக்கிறார். | கடனீட்டுப் பத்திரங்கள் நிறுமத்திற்குக் கொடுத்து கடனை உறுதிப்படுத்தும் சான்றாகும். |
| 2. | இலாபத்தை வழங்குதல் | போதுமான இலாபம் ஈட்டினால் மட்டுமே பங்குநருக்குப் பங்காதாயம் வழங்கப்படும். | குறிப்பிட்ட கால இடைவெளிகளில் இலாப நட்டத்தைக் கருதாமல் கடனீட்டுப் பத்திரங்கள் மீது வட்டி வழங்கப்படுகிறது. |
| 3. | இலாபத்தின் அளவு | முன்னிரிமைப் பங்குகட்கும் குறிப்பிட்ட வீதத்தில் நிலையான பங்காதாயம் ஆனால் நேர்மைப் பங்குநருக்குக் கொடுக்கப்படும் பங்காதாய வீதம் இலாபத்திற்கேற்ப மாறக் கூடியது. | குறிப்பிட்ட வீதத்தில் வட்டி செலுத்தப்பெறும் இலாபத்தின் அளவையொட்டி வட்டி வீதம் மாறாது. |
| 4. | இயக்குநர் ஒப்புதல் | இலாபம் ஈட்டியிருப்பினும் இயக்குநர் அவை பரிந்துரைத்து ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் தீர்மானத்தின் மூலம் விளம்பப் பட்டால் மட்டுமே பங்காதாயம் வழங்கப்படும். | கடனீட்டுப் பத்திர வட்டி செலுத்துவதற்கு எவருடைய பரிந்துரையும் ஒப்புதலும் வேண்டியதில்லை. |
| 5. | இலாபத்தை வழங்கல் | பங்காதாயம் இலாபப் பகிர்வாகும். | கடனீட்டுப் பத்திர வட்டி இலாபத்தின் மீதான செலவாகும். |
| 6. | பொறுப்பு | பங்குநர் ஒருவர் பொறுப்பு தான் வைத்துள்ள பங்குகள் மீது செலுத்தப் பெறாதிருக்கும் தொகையளவே ஆகும். | அத்தகைய பொறுப்பு ஏதும் கடனீட்டுப் பத்திரத்தாரர்களுக்கு இல்லை. |
| 7. | வட்டத்தில் வெளியிடுதல் | நிறுமச் சட்டத்தில் குறிப்பிட்டுள்ள சில நிபந்தனைகளுக்கு உட்பட்டு தான் வட்டத்தில் வெளியிடுதல். | கடனீட்டும் பத்திரங்களை வட்டத்தில் வெளியிட அத்தகைய நிபந்தனைகள் ஏதுமில்லை. |
| 8. | சொத்துகள் மீது பணை | நிறுமச் சொத்துகள் மீது பங்குநருக்கு ஈடு ஏதும் இல்லை. | கடனீட்டுப் பத்திரங்கள் பொதுவாக சொத்துகளைப் பிணையாக பெற்றிருக்கும். |
| 9. | பங்குதலைத் திருப்பித் தருதல் | மீள்தகு முன்னுரிமைப் பங்குகளைத் தவிர பிற வாழ்நாளில் திருப்பித் தரத்தக்கதல்ல. | குறிப்பிட்ட நாளில் அல்லது நிறுமம் வரும்போது கடனீட்டுப் பத்திரங்கள் மீட்கத் தக்கவை. |
| 10. | கூட்டத்தில் கலந்து கொள்ளும் உரிமை | பங்குநர்கள் நிறும உறுப்பினர்கள் என்ற முறையில் நிறுமக் கூட்டங்களில் கலந்து கொள்ளவும் உரிமை பெற்றவர்கள் உறுப்பினருக்குரிய அனைத்துச் சலுகைகளும் உண்டு. | கடனீட்டுப்பத்திரங்கள், கடனாளர்கள் ஆவதால், நிறுமக் கூட்டங்களில் கலந்து கொள்ளும் உரிமை கிடையாது. |

**முக்கிய வினாக்களின் தொகுப்பு :**

**நான்கு மதிப்பெண் வினாக்கள் :**

1. அமைப்பு வரையறு.
2. பன்னாட்டு நிறுமத்திற்கு 4 எடுத்துக்காட்டுகள் தருக.
3. கர்த்தா என்பவர் யார்?
4. தரவரிசை முறைக்கோட்பாடு என்றால் என்ன?
5. பொதுக்கூட்டுரு என்றால் என்ன?

6. தனி வணிகர் – வரையறு.
7. வரையறாப் பொறுப்பு என்றால் என்ன ?
8. கூட்டாண்மை – வரையறு.
9. இளவர் என்பவர் யார் ? ஒரு இளவர் கூட்டாளியாக இருக்க முடியுமா?
10. கூட்டு மற்றும் தனிப்பொறுப்பு என்றால் என்ன?
11. கூட்டாண்மைக் கலைப்பு, நிறுவனக் கலைப்பு – வேறுப்படுத்துக.
12. தனி வரையறு நிறுமம் – வரையறு.
13. கடனீட்டுப் பத்திரம் – வரையறு.
14. பங்கு முனைமம் என்றால் என்ன?
15. குறுமப் பங்கொப்பம் பெறவில்லையெனில் என்ன விளைவு ஏற்படும்?
16. சட்டமுறைக் கூட்டம் என்றால் என்ன?
17. மாற்று இயக்குநர் என்பவர் யார்?
18. இயக்குநர் நியமிக்கப்படும் முறைகளைக் குறிப்பிடுக.
19. நிகழ்ச்சி நிரல் என்றால் என்ன?
20. பகராள் என்றால் என்ன?
21. நிகழ்ச்சிக் குறிப்பேடு என்றால் என்ன?
22. தகவலறிக்கை என்றால் என்ன?
23. பங்கு மாற்றகம் – வரையறு.
24. பட்டியலிடுதல் என்றால் என்ன?
25. ஆயத்தக் கொடுப்பு ஒப்பந்தம் என்றால் என்ன?
26. பொது விடுப்பு என்றால் என்ன?
27. முடவாத்து என்பவர் யார்?
28. தமிழ்நாட்டிலுள்ள கூட்டுறவு சிறப்பங்காடிகளுக்கு 4 எடுத்துக்காட்டு தருக.
29. ஆதரவுப் பங்காதாயம் என்றால் என்ன?
30. ஒரு நபர்– ஒரு வாக்கு என்பதன் பொருள் யாது?
31. கூட்டுறவு அமைப்பு – வரையறு.
32. இராக்குடேல் முன்னோடிகள் என்பவர் யார்?
33. நாட்டுடைமையாக்கம் என்றால் என்ன?
34. இராணுவம் சார்ந்த தொழில்களுக்கு துறைவாரி அமைப்பே சிறந்ததென கூறப்படுவது ஏன்?
35. வாரிய அமைப்பின் பொருள் கூறுக.
36. ஒருங்கிணைத்தலின் பொருள் கூறுக.
37. உட்கிடை ஆணையுரிமை என்றால் என்ன?
38. மீள்தகு கடனீட்டுப்பத்திரங்கள் என்றால் என்ன?
39. சட்டமுறை அறிக்கை என்றால் என்ன?
40. நிகழ்ச்சிக் குறிப்பேடு என்றால் என்ன?

**எட்டு மதிப்பெண் வினாக்கள் :**

1. இந்துக் கூட்டுக் குடும்பம் – விவரி.
2. பன்னாட்டு நிறுமங்களை விவரி
3. கூட்டாண்மை பதிவு செய்யாமையின் குறைபாடுகள் யாவை?
4. கூட்டாண்மை ஒப்பாவனத்தின் உள்ளடக்கம் யாவை?
5. முறைகேடான ஒதுக்கீடு – குறிப்பு வரைக.

6. அமைப்பு முறையேடு என்றால் என்ன? அதில் உள்ள பொருளடக்கங்கள் யாவை?
7. பங்குகளை வட்டத்தில் வெளியிட உள்ள நிபந்தனைகளை விளக்குக.
8. செயல்முறை விதிகளில் உள்ள பொருளடக்கங்கள் யாவை?
9. சட்டமுறை அறிக்கையில் காணப்பெற வேண்டியவை யாவை?
10. பொது வரையறு நிறுமத்தில் இயக்குநர்கள் எவ்வாறு நியமிக்கப்படுகின்றனர்?
11. நிறுமத்தில் இயக்குநர் வகிக்கும் நிலையை விளக்குக.
12. கூட்டாளிகளின் வகைகளை விவரி.
13. முதலீட்டாளர் – ஊரக வணிகர் – வேறுபடுத்துக.
14. போல்ட் எவ்வாறு செயல்படுகிறது? அதன் ஆற்றல்கள் யாவை?
15. ஊரக வணிகர்களின் வகைகளை விவரி.
16. கூட்டுறவுச் சங்கத்தின் 8 குறைபாடுகளை விவரி.
17. கூட்டுறவுச் சிறப்பங்காடியின் பொருள் தந்து அதன் சிறப்பியல்புகளைத் தருக.
18. பொதுத் துறைக்கும் தனியார் துறைக்குமுள்ள வேறுபாடுகளை தருக.
19. தனி வரையறு நிறுமத்திற்கு கிடைத்திருக்கும் சலுகைகளை விவரி
20. தனி வரையறு நிறுமம் – பொது வரையறு நிறுமம் – வேறுபடுத்துக.

**20 மதிப்பெண் வினாக்கள்**

1. அமைப்பின் கோட்பாடுகளை விவரி.
2. பல்வேறு வகையான தொழில் வடிவமைப்புகளை விவரி
3. தனியாள் வணிகத்தின் குணாதிசயங்கள் யாவை?
4. தனியாள் வணிகத்தின் நன்மை தீமைகளை விவரி.
5. கூட்டாளிகளின் உரிமைகள், கடமைகளை விவரி.
6. கூட்டாண்மையை கலைக்க வேண்டிய சூழ்நிலைகளை விவரி.
7. கூட்டாண்மையின் நிறை, குறைகளை விவரி.
8. தகவலறிக்கை என்றால் என்ன? அதன் பொருளடக்கத்தை விவரி.
9. நிறுமச் செயலரின் பணிகளையும், கடமைகளையும் விவரி.
10. இயக்குநரின் அதிகாரங்கள், கட்டுப்பாடுகளை விவரி.
11. இயக்குநரின் பணிகள் மற்றும் கடமைகளை விவரி.
12. பங்கு மாற்றகத்தின் நன்மைகள், குறைபாடுகளை விவரி.
13. செபியின் நோக்கம், இயல்புகள், பணிகள், அதிகாரம் ஆகியவற்றை விவரி.
14. கூட்டுறவுச் சங்கத்தின் சிறப்பியல்புகளை விவரி.
15. கூட்டுறவுச் சங்கத்தின் நன்மைகளை விவரி.
16. அரசுத் தொழில்களின் நோக்கங்களை விவரி.
17. அரசு நிறுமத்தின் இயல்புகள், நிறைகுறைகளை விவரி.
18. கூட்டுப் பங்கு நிறுமம் – கூட்டாண்மை வேறுபடுத்துக.
19. பங்குகள் – கடனீட்டுப்பத்திரம் – வேறுபடுத்துக.
20. கூட்டுப் பங்கு நிறுமம் – கூட்டுறவுச் சங்கம் – வேறுபடுத்துக.
21. தனி நபர் கட்டுபாடு உலகிலேயே சிறந்தது – விவரி.
22. சமுதாயத்தில் தனி வணிகரின் பங்கினை விவரி.
23. பரஸ்பர நிதி என்றால் என்ன? அதன் செயல் முறைகளை விவரி.
24. பட்டியலிடுதல் என்றால் என்ன? அதன் செயல்முறைகள், பயன்களை விவரி.

1. அமைப்பின் கோட்பாடுகள் யாவை?

- ♠ நோக்கங்களின் ஒருமை
- ♠ வேலைப்பிரிவு
- ♠ கட்டுப்பாட்டு வீச்செல்லை
- ♠ தரவரிசை கோட்பாடு
- ♠ கட்டளையொருமை
- ♠ பணிவழி வரைவிலக்கணம்
- ♠ ஒருங்கிணைத்தல்
- ♠ ஒருமுறை இயக்கம்
- ♠ அதிகார ஒப்படைவு
- ♠ பொறுப்பு கோட்பாடு

1. <u>நோக்கங்களின் ஒருமை :</u>
ஒரு அமைப்பின் நோக்கம் இலக்கினை அடையக் கூடியதாக இருக்க வேண்டும்.

2. <u>வேலைப்பகிர்வு :</u>
தொழில் அமைப்பின் மொத்தப் பணிகளையும் பகிர்வு செய்ய வேண்டும்.இது துறைப்படுத்துதல் என அழைக்கப்படுகிறது.

3. <u>கட்டுப்பாட்டு வீச்செல்லை :</u>
ஓர் உயர் அலுவலர் தனக்குக் கீழ் நியாயமான எண்ணிக்கையிலுள்ள பணியானர்களை மேற்பார்வை செய்ய வேண்டும்.

4. <u>தரவரிசை கோட்பாடு :</u>
ஆணையுரிமையின் வரிசை உயர் மட்டத்திலுள்ள உயர் அலுவலரிடமிருந்து கீழ்மட்டத்திலுள்ள தொழியாளர்கள் வரை படிப்படியாக கீழ்நோக்கி வர வேண்டும். இதற்கு கட்டளை இணைப்பு என்று பெயர்.

5. <u>கட்டளையொருமை :</u>
ஒவ்வொரு பணியாளரும் ஆணைகளை ஓர் உயர் அதிகாரியிடமிருந்து பெற வேண்டும்.

6. <u>பணி வழி வரைவிலக்கணம் :</u>
ஒரு பணியாளரின் ஆணையுரிமையும் பொறுப்பும் தெளிவாக வரையறுக்கப்படுதல் அவசியம்.

7. <u>ஒருங்கிணைத்தல் :</u>
ஒரு அமைப்பின் இலக்கை அடைய அனைத்து நடவடிக்கையும் ஒருங்கிணைக்க வேண்டும். கொள்முதல் துறையும், விற்பனைத் துறையும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும்.

8. <u>ஒரு முனை இயக்கம் :</u>
அமைப்பின் நோக்கங்கள் வெற்றியடைய ஒரு தலைமையும், ஒரு திட்டமிடுதலும் இருக்க வேண்டும்.

9. <u>அதிகார ஒப்படைவு :</u>
ஓர் உயர் அலுவலர் தனக்குக் கீழ் பணியாற்றும் பணியாளர்களுக்கு கடமையை நிறைவேற்ற தேவையான அதிகாரங்களையும், உரிமைகளையும் வழங்க வேண்டும்.

10. <u>பொறுப்பு ஒப்படைவு :</u>
ஓர் உயர் அலுவலர் தனக்குக் கீழ் பணியாற்றும் பணியாளர்களின் செயல்களுக்கு பொறுப்பாகிறார்.

2. பல்வேறு வகையான தொழில் வடிவமைப்புகளைப் பற்றி சுருக்கமாக எழுதுக.

**வணிக அமைப்பு**

| தனிநபர் நிறுவனங்கள் | அரசு நிறுவனங்கள் |
|---|---|
| 1. தனி வகைகள் | 1. துறை முறை அமைப்பு |
| 2. இந்து கூட்டுக்குடும்பம் | 2. பொதுக் கூட்டுரு |
| 3. கூட்டாண்மை | 3. அரசு நிறுமம் |
| 4. கூட்டுப் பங்கு நிறுமம் | 4. வாரிய அமைப்புகள் |
| 5. கூட்டுறவு அமைப்புகள் | |
| 6. பன்னாட்டு நிறுமங்கள் | |

1. தனி வணிகர் :

ஒரு தனி நபரால் நடத்தக்கூடிய வியாபார அமைப்பு தனியாள் வணிகமாகும்.

2. இந்துக் கூட்டுக் குடும்பம் :

இந்துக் கூட்டுக் குடும்ப வணிகத்தை குடும்பத் தலைவர் மூலம் நடத்துவர். குடும்பத் தலைமை உறுப்பினருக்கு கர்த்தா என்று பெயர். குடும்ப உறுப்பினர்களுக்கு கூட்டு வாரிசுதாரர் என்று பெயர்.

3. கூட்டாண்மை :

கூட்டாண்மை என்பது இருவர் அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களின் ஒப்பந்தத்தின் மூலம் ஏற்படுவதாகும்.

4. கூட்டுப்பங்கு நிறுமம் :

ஒரு நிறுமம் என்பது சட்டத்தால் உருவாக்கப்பட்ட செயற்கை நபர் நீண்ட ஆயுட்காலம் உடையது. பொது முத்திரை கொண்டு செயல்படுகிறது.

5. கூட்டுறவு அமைப்புகள் :

கூட்டுறவு சங்கம் என்பது நபர்கள் தாமாகவே அமைத்துக் கொள்ளும் சங்கமாகும். கூட்டுறவு சங்கங்களின் முக்கிய நோக்கம் சேவை செய்வது ஆகும்.

6. பன்னாட்டு நிறுமங்கள் :

பன்னாட்டு நிறும்ம என்பது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நாடுகளில் வியாபாரத்தை நடத்துவதாகும். எ.கா. பிப்ஸ்.

அரசு நிறுவனங்கள் :

1. துறைமுறை அமைப்பு :

இது மத்திய அரசாலோ அல்லது மாநில அரசாலோ நடத்தப்படுவதாகும். எ.கா. ரயில் போக்குவரத்து.

2. பொதுக் கூட்டுரு :

இது பாராளுமன்றத்தில் உருவாக்கப்பட்ட தனிச் சட்டங்களில் உண்டாக்கப்படுவதாகும். எ.கா. இந்திய ரிசர்வ் வங்கி.

3. அரசு நிறுமங்கள் :

ஒரு நிறுமத்தின் சொத்துப்பெற்ற பங்கு முதல் 51%க்குக் குறையாமல் மத்திய (அ) மாநில அரசு வைத்திருக்குமானால் அதனை அரசு நிறுமம் எனலாம்.

4. வாரிய அமைப்பு :

வாரிய அமைப்பின் மேலாண்மை அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட ஒரு குழவிடம் உள்ளது. எ.கா. தமிழ்நாடு மின்சார வாரியம்.

# பொது மாதிரி வினாத்தாள்

## வணிகவியல்

நேரம் : 3 மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 150

பகுதி – I

குறிப்பு : i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

I. சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக.

1. பின்வரும் சிறப்பியல்புகளில் எது தனி வணிகருக்கு ஏற்றதல்ல ?
   அ) தனிநபர் உரிமை ஆ) தனி மனிதக் கட்டுப்பாடு
   இ) எல்லா இலாபமும் வணிகருக்கே ஈ) நெகிழ்ச்சி தன்மையற்றது.
2. பதிவு கட்டாயமாக்கப்பட்டுள்ள அமைப்பு
   அ) தனி வணிகர் ஆ) கூட்டாண்மை
   இ) கூட்டு பங்கு நிறுமம் ஈ) இந்து கூட்டு குடும்ப வணிகம்
3. ஒரு பன்னாட்டு நிறுமம் .................. என அழைக்கப்படுகிறது.
   அ) உலக அளவில் பெரியது ஆ) கூட்டாண்மை
   இ) கூட்டுறவுச் சங்கங்கள் ஈ) பொதுத்துறை நிறுவனங்கள்
4. கூட்டாண்மையின் அடிப்படைக் கூறு
   அ) பூரண நல்ல நம்பிக்கை ஆ) முதலீட்டிற்கான தொகை இருத்தல்
   இ) கூடித் தொழில் செய்ய விருப்பம் ஈ) இடர்பாடு
5. கூட்டாண்மை உருவாக்கப்படுவது
   அ) அரசால் ஆ) ஒப்பந்தத்தால்
   இ) கூட்டாளிகளிடையே ஈ) தகுதி
6. ஒவ்வொரு கூட்டாளியும் தொழிலுக்கு வழங்கிய கடன் மற்றும் முன் பணம் மீது ஆண்டுக்கு.......... வட்டி பெற உரிமை உண்டு
   அ) 6 % ஆ) 10 %
   இ) 12 % ஈ) 18 %
7. கூட்டாண்மை அமைப்பில் உறுப்பினர்கள் ஒன்றாக ................. என்று அழைக்கப்படுகின்றனர்
   அ) கூட்டாளிகள் ஆ) நிறுவனம்
   இ) பங்குதாரர்கள் ஈ) தனி வணிகர்
8. தனி வரையறு நிறுமம் ஒன்று தொழிலை தொடங்குவது
   அ) தொழில் கூட்டுறவு சான்றிதழ் பெற்றவுடன் ஆ) தொழில் தொடங்கச் சான்றிதழ் பெற்றவுடன்
   இ) பதிவாளரிடமிருந்து தான் தேர்தெடுத்துள்ள நிறுமப் பெயருக்கு ஒப்புதல் கிடைத்தவுடன்
   ஈ) பதிவாளரிடம் நிறும அமைப்பிற்குரிய அனைத்து ஆவணங்களையும் தாக்கல் செய்த பின்னர் தொழில் தொடங்கலாம்.
9. கீழ்கண்டவற்றுள் எது நாடாளுமன்ற அல்லது மாநில சட்டமன்றங்கள் இயற்றிய தனிச்சட்டத்தின் மூலம் உருவாக்கப்படுகிறது?
   அ) பட்டய (சாசன) நிறுமம் ஆ) அயல்நாட்டு நிறுமம்
   இ) அரசு நிறுமம் ஈ) சட்டமுறை நிறுமம்

10. பொது வரையறு நிறுமத்தில் குறைந்த அளவு உறுப்பினர்களின் எண்ணிக்கை

அ) 2 ஆ) 3

இ) 7 ஈ) 10

11. நிறுமச் செயலர் ஒருவர் நியமிக்கப்படுவது

அ) அரசால் ஆ) இந்திய நிறுமச் செயலர்கள் அமைப்பால்

இ) இயக்குநர் அவையால் ஈ) ஆண்டுப் பொதுக்கூட்டத்தில்

12. ஒரு இயக்குநர் ...................... செயலாற்றுகிறார்.

அ) நிறுமத்தின் முகவராக

ஆ) நிறுமத்தின் பொறுப்பாண்மையர் அல்லது நம்புறுதியாண்மையராக

இ) நிறுமத்தின் முதன்மை அதிகாரியாக ஈ) இவை அனைத்துமாக

13. பங்கு மாற்றகம் இதில் ஈடுபட்டு இருக்கிறது

அ) சரக்கு ஆ) சேவைகள்

இ) நிதிப் பத்திரங்கள் ஈ) நாட்டின் பணம்

14. எதிலும் கெட்டதையே காண்கின்ற மனப்பாங்கு கொண்ட ஊக வணிகர்கள்

அ) கலைமான் ஆ) கரடி

இ) காளை ஈ) வாத்து

15. பத்திர ஒப்பந்த (ஒழுங்குபடுத்துதல்) சட்டம் நிறைவேற்றப்பட்ட ஆண்டு

அ) 1952 ஆ) 1956

இ) 1964 ஈ) 1966

16. கூட்டுறவுச் சங்கத்தில் அதிகப்பட்ச உறுப்பினர்களின் எண்ணிக்கை

அ) 50 ஆ) 60

இ) 100 ஈ) வரையறை இல்லாதது

17. கூட்டுறவு அமைப்பில் அதன் உறுப்பினர்களுக்கு பங்காதாயம் அறிவிப்பது

அ) பங்கு முதலின் அடிப்படையில்

ஆ) பங்குகள் வாங்கிய எண்ணிக்கையின் அடிப்படையில்

இ) ஆதரவின் அடிப்படையில் ஈ) இவற்றுள் எதுவுமில்லை

18. அரசு நிறுமம் பதிவு செய்யப்படுவது

அ) அரசாங்கத்தின் தனிச்சட்டத்தின் கீழ் ஆ) இந்திய நிறுமச்சட்டம் 1956 ன் கீழ்

இ) அரசன் / அரசியின் சாசனத்தின் கீழ் ஈ) அரசாங்கத்தின் கட்டளைப்படி

19. பொதுமக்களும் இந்நிறுவனத்தின் பங்குகளை வாங்கலாம்

அ) பொதுக் கழகம் ஆ) துறைவாரி அமைப்பு

இ) அரசு நிறுமம் ஈ) இவற்றுள் எதுவுமில்லை

20. அரசுத் தொழில்கள் மிகச் செம்மையாக இயங்கவதற்கு மிகவும் உகந்தது என பொதுவாகக் கருதப்படும் வடிவமைப்பு

அ) துறைவாரி அமைப்பு ஆ) பொதுக் கழகம்

இ) அரசு நிறுமம் ஈ) கூட்டுப் பங்கு நிறுமம்

II. கோடிட்ட இடங்களை நிரப்புக :

21. இந்திய ஆயுள் காப்பீட்டு கழகம் ............... நிறுமத்திற்கு உதாரணமாகும்.

22. தனி வணிகரின் பொறுப்பு .......................... ஆகும்.

23. .................... என்பது மிகப்பழமையான தொழில் அமைப்புகளின் வடிவமாகும்.

24. கூட்டாண்மையை கட்டுப்படுத்தும் ஒரு கூட்டாளியின் உரிமை .................... உரிமை.

25. எந்தப் பெயரில் கூட்டாண்மைத் தொழில் நடத்தப்படுகிறதோ அதுவே ................................ ஆகும்.

26. தகுதிப் பங்குகளின் மொத்த இயல்மதிப்பு ...................... ரூபாயை மிகக்கூடாது.

27. நிலுவையில் உள்ள பங்காதாயம் பெற உரிமையுள்ள முன்னுரிமைப் பங்குகள்........................... என அழைக்கப்படுகின்றன.

28. குறிப்பிட்ட காலக் கெடுவுக்குப் பின் நிறுமம் மீட்டுக் கொள்ளும் கடனீட்டுப் பத்திரம்......................

29. ஒரு பொது நிறுமத்தில் பங்குகள் / கடனீட்டுப் பத்திரங்களை வாங்குமாறு பொதுமக்களிடம் அழைப்பு விடும் விளம்பரத்திற்கு .................. என்று பெயர்.

30. நிறுவனத்தில் பங்கேற்காத கூட்டாளியை .......................... என்று அழைக்கிறோம்.

31. நிறுமத்தின் முதலாவது இயக்குநர்கள் வழக்கமாக ................. இல் பெயரிடப்பட்டிருப்பர்.

32. ஒரு கூட்டத்திற்கு தேவையான குறைந்தபட்ச உறுப்பினர்கள் எண்ணிக்கைக்கு ...................... என்று பெயர்.

33. பங்குநர் ஒருவர்க்குப் பதிலாகக் கூட்டத்தில் கலந்து கொள்ள நியமிக்கப்படும் நபர் .................. என அழைக்கப்படுகிறார்.

34. செயல்முறை விதிகளில் மாற்றம் செய்ய ...................... தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும்.

35. ................. புதிய பங்குகளை வெளியிட இடைத்தரகர்களாக செயல்படுகின்றனர்.

36. இந்தியாவில் ....................... பிராந்திய பங்கு மாற்றகங்கள் உள்ளன.

37. இரண்டாம் நிலைச்சந்தையின் வாணிப அளவு .......................... யை பொறுத்து இருக்கும்.

38. கோ– ஆப்பரெரி என்ற இலத்தீன் மொழியின் பொருள் .........................

39. கூட்டுறவி சங்கத்தின் மேலாண்மை முழுவதுமே ............................ கொண்டது.

40. ...................... ஒரு சிலரிடம் பொருளாதார வலிமை செறிவதைத் தடை செய்கிறது.

பகுதி – ஆ

குறிப்பு : i) எவையேனும் பத்து வினாக்களுக்கு விடையளிக்கவும்

ii) ஒவ்வொரு விடையும் நான்கு வரிகளுக்கு மிகாமல் அமைந்திட வேண்டும்.

41. கட்டளை ஒருமை என்றால் என்ன?

42. கர்த்தா என்பவர் யார்?

43. தனிவணிகர் – இலக்கணம் தருக.

44. பெயரளவு கூட்டாளி என்பவர் யார்?

45. வரையறுத்த கூட்டாண்மை என்றால் என்ன?

46. பங்கு முனைமம் என்றால் என்ன?

47. அரசு நிறுமம் என்றால் என்ன?

48. சிறப்பு பொதுக்கூட்டத்தை யார் கூட்டலாம்?

49. மாற்று இயக்குநர் என்பவர் யார்?

50. பத்திரம் என்றால் என்ன?

51. பட்டியலிடுதல் என்றால் என்ன?

52. கூட்டுறவு அமைப்பு – வரையறு.

53. ஒரு நபர், ஒரு வாக்கு என்பதன் பொருள் யாது?

54. பொதுக்கழகத்திற்கு ஏதேனும் 4 உதாரணங்கள் தருக.

55. நாட்டுடமையாக்குதல் என்றால் என்ன?

பகுதி – இ

குறிப்பு : i) எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளிக்கவும்

ii) ஒவ்வொரு விடையும் ஒரு பக்க அளவிற்கு மிகாமல் அமைந்திட வேண்டும்.

56. குறிப்பு வரைக :

அ) அதிகார ஒப்படைவு

ஆ) தரவரிசை கோட்பாடு

57. கூட்டாளிகளின் எவையேனும் எட்டு உரிமைகளை விளக்குக.

58. அமைப்பு முறையேட்டுக்கும், செயல் முறை விதிகளுக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?

59. தனி நிறுமத்திற்கான எவையேனும் எட்டு சலுகைகளை விளக்குக.

60. சட்டமுறை அறிக்கையில் காணப் பெற வேண்டியவை யாவை?

61. பங்கு மாற்றகத்தின் இயல்புகள் யாவை?

62. கூட்டுறவு சிறப்பங்காடிகளின் எவையேனும் ஐந்து பயன்களையும் மூன்று தீமைகளையும் விளக்குக.

63. அரசு தொழில்களின் எவையேனும் நான்கு நோக்கங்களை விளக்குக.

பகுதி – ஈ

குறிப்பு : i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்

ii) ஒவ்வொரு விடையும் இரண்டு பக்க அளவிற்கு மிகாது அமைந்திட வேண்டும்.

64. அ) எவையேனும் ஐந்து தொழில் வடிவமைப்புகளைப் பற்றி விளக்குக. (அல்லது)

ஆ) பங்குகளுக்கும், கடனீட்டுப்பத்திரங்களுக்கும் உள்ள வேறுபாடுகளை விவரி.

65. அ) கூட்டாண்மை நிறுவனம் கலைக்கப்படும் சூழ்நிலைகளை விளக்குக. (அல்லது)

ஆ) இயக்குநர்களின் அதிகாரங்கள் மற்றும் கடமைகளை விவரி.

66. அ) தனியாள் வாணிகத்தின் எவையேனும் பத்து நன்மைகளை விவரி. (அல்லது)

ஆ) பங்கு மாற்றகத்தின் நன்மைகள் யாவை ?

67. அ) கூட்டுறவு சங்கங்களுக்கும், கூட்டுப் பங்கு நிறுமங்களுக்கும் இடையே உள்ள ஏதேனும் பத்து வேறுபாடுகளை விவரி. (அல்லது)

ஆ) அரசு நிறுமத்தன் இயல்புகள், நிறை குறைகள் யாவை ?

1. முதலீட்டாளர், ஊக வணிகர் வேறுபாட்டினை விளக்கு.

| வ. எண். | முதலீட்டாளர்கள் | ஊக வணிகர்கள் |
|---|---|---|
| 1. | தங்கள் முதலீடுகளின் பாதுகாப்பையே பெரிதும் விரும்புவர் | முதலீடுகளின் மதிப்பு அதிகரிப்பதிலும் இலாபம் பெறுவதிலும் குறியாக இருப்பர் |
| 2. | தங்கள் முதலீடுகளின் மூலம் வருவாய் ஈட்டுவதையே விரும்புவர் | பத்திரங்களை வாங்கி விற்பதன் மூலம் கிடைக்கும் இலாபத்தையே விரும்புவர் |
| 3. | இடர்பாடு குறைவு | இடர்பாடு அதிகம் |
| 4. | நிலையான வருவாய் | நிலையற்ற ஆதாயம் |
| 5. | பத்திரங்களை வாங்கும்போது பணத்தைக் கொடுத்து பத்திரங்களின் உடமையை பெற்றுக் கொள்வர் | பத்திரங்களின் உரிமையை பெறுவதோ அல்லது தருவதோ இல்லை |
| 6. | நீண்டகால ஈடுபாடும் பொறுப்பும் உள்ளவர் | குறைந்த கால ஈடுபாடும் பொறுப்பும் உள்ளவர் |

2. தனி வரையறு நிறுமத்திற்கும் பொதுவரையறு நிறுமத்திற்கும் உள்ள வேறுபாடு

| வ. எண். | வேறுபாடு | தனி வரையறு நிறுமம் | பொது வரையறு நிறுமம் |
|---|---|---|---|
| 1. | குறைந்த அளவு உறுப்பினர் | 2 | 7 |
| 2. | அதிக அளவு உறுப்பினர்கள் | 50 | வரையறை இல்லை |
| 3. | பெயர் | தனி வரையறுக்கப்பட்டது | வரையறுக்கப்பட்டது |
| 4. | சட்டமுறை கூட்டம் | கூட்டத் தேவையில்லை | 6 மாத்திற்குள் கூட்டப்பட வேண்டும் |
| 5. | ஊதியம் | வரம்பு இல்லை | நிகர லாபத்தில் 11% |
| 6. | தகவலறிக்கை வெளியிடல் | தடை செய்யப்பட்டுள்ளது | வெளியிட முடியும் |
| 7. | பங்காணை வெளியிடல் | வெளியிட முடியாது | வெளியிட முடியும் |
| 8. | ஓய்வு | 65 வயதிற்குள் மேல் பணியாற்றலாம் | 65 வயதிற்குள் ஓய்வு பெற வேண்டும் |

3. கூட்டுறவு சங்கத்திற்கும், கூட்டுப்பங்கு நிறுமத்திற்கும் உள்ள வேறுபாடு?

| வ. எண். | தலைப்பு | கூட்டுப்பங்கு நிறுமம் | கூட்டுறவு சங்கம் |
|---|---|---|---|
| 1. | பொருள் | லாப நோக்கத்தோடு நடத்தப்படுவது, பேரளவு தொழில் | இவை உறுப்பினர்களுக்கு சேவை செய்வது, நலிவடைந்தவர்கள் ஒன்று சேர்வது. |
| 2. | குறைந்த அளவு உறுப்பினர்கள் | தனி வரையறை நிறுமம் - 2, பொது வரையறை நிறுமம் - 7 | குறைந்தது 25 நபர்கள் |
| 3. | அதிக அளவு உறுப்பினர்கள் | தனி வரையறை நிறுமம் - 50, பொது வரையறை நிறுமம் - வரையறை இல்லை | வரையறை இல்லை |
| 4. | பதிவு | நிறும சட்டம் 1956ன்படி கட்டாயம் பதிவு செய்ய வேண்டும் | மாநில கூட்டுறவு சட்டப்படி பதிவு செய்ய வேண்டும் |
| 5. | நோக்கம் | லாபம் ஈட்டுவது இதன் முதன்மையான நோக்கம் | உறுப்பினர்களுக்கு சேவை செய்வது இதன் நோக்கம் |
| 6. | பங்கு மாற்றுதல் | பங்குகளை எளிதாக மாற்றலாம் | தடை விதிக்கப்பட்டுள்ளது |
| 7. | முக்கியத்துவம் | பணத்திற்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது | மனிதனுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது |

4. பங்குகளுக்கும், கடனீட்டு பத்திரத்திற்கும் உள்ள வேறுபாடு?

| வ. எண். | தலைப்பு | பங்குகள் | கடனீட்டு பத்திரம் |
|---|---|---|---|
| 1. | பொருள் | பங்கு முதலின் ஒரு சிறிய பகுதி | கடனை உறுதிப்படுத்தும் ஒரு ஆவணம் |
| 2. | நிலை | உரிமையாளர் நிலை | நிறுமத்தின் கடனாளர் |
| 3. | லாபத்ததை வழங்குதல் | பங்காதாயம் லாப பகிர்வு ஆகும் | வட்டி லாபத்தின் மீது செலவு |
| 4. | பொறுப்பு | வரையறுத்தப் பொறுப்பு | பொறுப்பு எதுவும் கிடையாது |
| 5. | பிணை | சொத்தின் மீது பிணை இல்லை | சொத்துக்கள் மீது பிணை உண்டு |
| 6. | வட்டத்தில் வெளியிடுதல் | பங்குகளை வட்டத்தில் வெளியிடலாம் | வட்டத்தில் வெளியிட முடியாது |
| 7. | கூட்டத்தில் கலந்து கொள்ளும் உரிமை | எல்லா கூட்டங்களிலும் கலந்து கொள்ளலாம் | உரிமை கிடையாது |

5. செபியின் பணிகள், அதிகாரங்கள் யாவை?

நோக்கங்கள் :

1. முதலீட்டாளர்களின் நலன்களை பாதுகாத்தல்
2. பத்திர சந்தை நடவடிக்கைகளை ஊக்கப்படுத்துதல், அபிவிருத்தி செய்தல் மற்றும் ஒழுங்குப்படுத்துதல்

இயல்புகள் :

1. செபி சட்டத்தின்படி ஏற்படுத்தப்பட்ட நீடித்த வாழ்வு மற்றும் பொது முத்திரையை கொண்ட ஒரு கூட்டுருவாக்கம் ஆகும்.
2. செபியின் தலைமை அலுவலகம் மும்பையிலும் கிளை அலுவலகங்கள் இந்தியாவில் மற்ற நகரங்களிலும் இயங்கும்.
3. சபை தலைவருடன் மொத்தம் 6 பேர் செபியில் உறுப்பினர்கள் உள்ளனர்.
4. வாரியத்தின் சபை தலைவரையும் மற்ற உறுப்பினர்களையும் அப்பொறுப்பில் இருந்து நீக்க மத்திய அரசுக்கு அதிகாரம் உண்டு.
5. மத்திய அரசு நிதி உதவி செய்வதுடன் வாரியத்திற்கு அவ்வவ்பொழுது தேவைப்படும் மானியங்களையும் வழங்குகிறது.
6. செபியின் பொது கண்காணிப்பு, வழிகாட்டுதல், மேலாண்மை ஆகியவை உறுப்பினர் அவையிடம் இருக்கும்.

பணிகள் :

1. பங்கு மாற்றகங்களின் வியாபாரத்தை ஒழுங்கு படுத்துதல்.
2. பரஸ்பர நிதியகங்கள் உள்ளிட்ட முதலீட்டு நிறுவனங்களை பதிவு செய்து ஒழுங்குபடுத்துதல்.
3. சுயக்கட்டுபாட்டு நிறுவனங்களை தோற்றுவித்தல்
4. பத்திர சந்தையில் மோசடியான (ம) நேர்மையற்ற வணிக நடவடிக்கையை தடை செய்தல்.
5. பத்திரங்களுக்கான உள் வணிகத்தை தடை செய்தல்.
6. முதலீட்டாளர்களிடையே விழிப்புணர்ச்சியை வளர்த்தல் (ம) இடைத்தரகர்களுக்கான பயிற்சி அளித்தல்.

அதிகாரங்கள் :

1. பங்கு மாற்றகத்திடமிருந்து பருவகால அறிக்கைகளை கோருதல்
2. பங்குகளைப் பட்டியலிடக் கோரி பொது நிறுமங்களைக் கட்டாயப்படுத்துதல்.
3. சில ஆவணங்களை பராமரிப்பது குறித்து பங்கு மாற்றங்கட்கு வழிமுறைகளை வகுத்தளித்தல்.
4. பங்கு மாற்றகங்களின் மேலாண்மை குழுவின் செயல்பாட்டை விலக்கி வைக்கும் அதிகாரம்.
5. பங்கு மாற்றத்திற்கு அங்கிகாரம் அளிக்கும் உரிமை.
6. குறிப்பிட்ட சில நிலைகளில் ஒப்பந்தங்களை தடை செய்வதற்கான உரிமை.